பதிவு நெ: [illegible]

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 26—12—48 | இதழ் [illegible]

## மறுக்க முடியாது

"அதிகாரம் அரசியலை ஊழல் மயமாக்கி விடுகிறது என்ற பழமொழி பிரபல்யமாக இருந்து வருகிறது. அதிகாரத்துடன் நமக்குத் தொடர்பு ஏற்பட்ட உடனேயே நம்மையும் ஒழுக்கம் கெடச் செய்துவிட்டதென்பதை மறுக்கமுடியாது. சீரிய ஒழுக்கம் என்ற உயர்ந்த பீடத்தில் தாங்கள் இருந்து வருவதாக இனிக் காங்கிரஸ்காரர்கள் கூறிக்கொள்ளவே முடியாது, ஒழுக்கம் பற்றிய தீர்மானம், காங்கிரஸ் தலைவர்களிலேயே மிகப் பெரிய தலைவராக விளங்கும் பண்டித நேரு உள்பட எல்லாக் காங்கிரஸ்காரர்களுக்கும் எச்சரிக்கையாகும். இந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையானதாகும்."

ஜெயப்பூர் மாநாட்டில்
சங்கரராவ்தேவ்
(18—12—48)

# மலேயாவின் உரிமைப் போர்

பிரிட்டனின் ஜீவாதாரமான காலனிகளில் ஒன்று மலேயா. மலேயாவின் தகரச்சுரங்கங்களும் ரப்பர் தோட்டங்களும் பிரிட்டிஷ் முதலாளிகள் வசமுள்ளன. யுத்த முற்காலத்தில் உலக உற்பத்தியில் 30 சதவீத தகரத்தையும் 40 சதவீத ரப்பரையும் மலேயா உற்பத்தி செய்தது.

## பிரிட்டிஷ் கொள்ளை

தகரத் தொழிலில் பெரிய பிரிட்டிஷ் கம்பெனிகள் அரசு புரிகின்றன. பிரிட்டிஷ் டின் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் 342 கோடி ரூ முதல் உடையது. லண்டன் தகர கார்ப்பொரேஷனின் கீழுள்ள 17 கம்பெனிகளில் 8 கோடி ரூ. முதலீடு.

மலேயா ரப்பர் தொழிலில் பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு 182 கோடி ரூ. முதல் இருப்பதாகப் பிரிட்டிஷ் மந்திரி நோயல் பேகர் கூறினார்.

நூறாண்டுகளாக இந்த முதலாளிகள் மலேயா மக்களின் உழைப்பையும் செல்வத்தையும் சுரண்டி, இந்த முதலைப் போல ஆயிரம் மடங்கு லாபம் சம்பாதித்து விட்டார்கள். இந்த லாபவேட்டையை நீடித்து நடத்த விரும்புகின்றனர். இந்தச் சுரண்டலைப் பாதுகாப்பதற்குத்தான் இன்று பிரிட்டிஷ் ஆட்சி கலோனியல் யுத்தம் நடத்துகிறது.

## தொழிலாளர் நிலைமை

தங்களுடைய லாப விகிதத்தைப் பாதுகாக்கவும் பெருக்கவும் பிரிட்டிஷ் முதலாளிகள் தொழிலாளிகளின் கூலியை வெட்டுகிறார்கள். மறுபுறத்தில் விலைவாசிகளோ எக்கச்சக்கமாக உயர்ந்துவிட்டன. "உணவு தானியத்தின் நிர்ணய விலைகளே 500 சதவீதம் அதிகரித்துவிட்டன; யுத்த முற்காலத் தேவைகளில் 30 சதவீதம்தான் ரேஷன் கிடைக்கிறது. அதிகப் பட்சமாகக் கிடைத்துள்ள கூலி உயர்வும் பஞ்சப்படியும் யுத்த முற்கால விகிதத்தைவிட 100 சதவிகிதமே கூடுதல்" என்று மலேய மக்களின் ஐக்கிய முன்னணி லண்டனிலிருந்து விடுத்துள்ள அறிக்கையில் கூறுகிறது. யுத்த முற்கால கூலியே மிகவும் கேவலமான கூலிதான். ஜாஸ்தியாகப் போனால், பஞ்சப்படி உட்பட அது இரு மடங்காகியிருக்கிறது. ஆனால் நிர்ணயவிலைகள் மாத்திரம் 5 மடங்கு அதிகம். நிர்ணய விலையில் கிடைக்கும் ரேஷனைப்போல இருமடங்கு கள்ள மார்க்கெட் விலையில் வாங்கினால்தான் ஜீவனம் நடத்தமுடியும்! இந்த நிலைமையை எதிர்த்துத்தான் மலாய் நாட்டுச் சீன, இந்திய, மலாய் தொழிலாளிகள் போராடுகின்றனர்.

பிரிட்டிஷ் அடக்கு முறையை எதிர்க்காத ஆண்டிரூராத் என்ற ஹிந்துநிருபர்கூட, "இந்தப்பிராந்தியத்தில் வேறு எந்தத் தேசத்தையும் விட இங்கு அரிசி விலை அதிகம். கூலியை உயர்த்திக்கொள்ளத் தொழிலாளர்கள் செய்த முயற்சிகளை முதலாளிகள் பிடிவாதமாக எதிர்த்து வந்திருக்கிறார்கள். கூலித் தகராறுகள் நீண்டகால, பிடிவாதமான ஸ்ட்ரைக் போராட்டங்களை விளைவித்திருக்கிறது. சமரசங்கள் ஏற்பட்ட பிறகும், அடிக்கடி தொழிலாளர் தலைவர்கள் பழிவாங்கப்பட்டனர்......." என்று எழுதுகிறார்.

இந்தப் பொருளாதாரத் தாக்குதலுடன் பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு அரசியல் தாக்குதலையும் தொடுத்தது.

மலேய சமஷ்டிக்கு ஒரு புதிய அரசியல் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது.

## அடிமைச் சட்டம்

இந்தச் சட்டம் சிங்கப்பூர் தீவை மலேயாவிலிருந்து துண்டித்தது. கீழ்க்கோடி பிரதேசத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஜீவ நாடியான கடற்படைத் தளமாக விளங்கும் சிங்கப்பூரைப் பிரிட்டிஷ் ஆட்சியின் நேரடியான ஆதிக்கத்தில் பாதுகாப்பும், போராட்ட அனுபவம் மிக்க சிங்கப்பூர் தொழிற் சங்க இயக்கத்தை மலாய் இயக்கத்திலிருந்து தனிமைப் படுத்துவதுமே இதன் நோக்கம்.

இரண்டாவதாக மலேயாவுக்கு ஒரு புதிய சட்டசபை சிருஷ்டிக்கப்பட்டது. இதில் 76 அங்கத்தினர்கள்; அவர்களில் 15 பேர் அதிகாரிகள்; மீதிப் பேரை பிரிட்டிஷ் ஹைகமிஷனர் நியமிப்பார். மேலும், நம் தேச சமஸ்தானாதிபதிகளைப்போல மலேயாவிலுள்ள சுல்தான்களுக்கு விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்பட்டன.

இந்த அடிமைச் சாசனத்தை மலாய ஜனநாயக வாதிகள் அளவு கடந்த வெறுப்புடன் நிராகரித்ததில் ஆச்சரியமில்லை.

தோட்ட முதலாளிகள் — சுரங்க முதலாளிகள் கூட்டணியின் அரசியல் அது. தொழிலாளிகளை மென்மேலும் சுரண்டி, லாபத்தைப் பாதுகாப்பதே இதன் நோக்கம்.

## விடுதலைப் போர்

இந்த அடிமைச் சீட்டையும் சுரண்டலையும் எதிர்த்து மலேய தொழிலாளிகள் போராடினார்கள். முதலாளிகள் குண்டர்களை ஏவிவிட்டனர். அரசாங்கம் ராணுவச் சட்டத்தை அமல் செய்தது. அஞ்சா நெஞ்சத்துடன் தொழிலாளிகள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தைத் தொடங்கினார்கள். பத்தாயிரம் வீரர்களடங்கிய பிரிட்டிஷ் எதிர்ப்பு ராணுவம்—ஜப்பானை எதிர்த்துப் போராடி அனுபவமும் தேர்ச்சியும் பெற்ற ராணுவம்—முன்னணியில் நின்றது.

விசேஷ அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. தூக்கு மேடையைக் காட்டி மக்களைப் பயமுறுத்தத் தொடங்கியது அரசாங்கம். தொழிற் சங்கங்களும் வாலிபர் ஸ்தாபனங்களும் கம்யூனிஸ்ட் கட்சியும் சட்டவிரோதமாக்கப் பட்டன.

அடிமைச்சாசனத்துக்கு எதிராக, சகிக்கமுடியாத சுரண்டலுக்கு எதிராக, நூறாண்டுகளாகத் தங்கள் இரத்தத்தை குடித்த அன்னிய முதலாளிக் குழுவுக்கு எதிராக, விடுதலைக்காகவும் சுபிட்சத்துக்காகவும் அவர்கள் போராடுகிறார்கள். இதனால்தான், வால்டர் பிளேட்சர் என்ற டோரி அங்கத்தினரே "ஆசியாவை விட்டு வெளியேறு" இயக்கமே மலாய் போராட்டமென்று பார்லிமெண்டில் கூறினார்.

அதனால்தான் 50,000 துருப்புகளும் போலீஸும் உபயோகப்படுகின்றன. அவ்வளவு துருப்புகளுடன் "வெற்றி"யடைய 15 மாதங்களாகுமென்கிறார் பிரிட்டிஷ் ஜெனரல் புச்சர்.

50 லட்ச ஜனங்கள் வசிக்கும் தேசத்தில் 50000 துருப்புகள். 100 ஜனங்களுக்கு ஒருவன்.

மலாய்நாட்டில் நடக்கும் போராட்டம் சுதந்திரப் போராட்டம்.

(15-ம் பக்கம் பார்க்க)

# எங்கே அந்த உற்சாகம்?

புராதனக் கோயிலில் இருந்த வெள்ளித் தேர்! நான்கு காளைகள் பூட்டப்பட்டு, 'நவபாரத வீரரும் வீராங்கனைகளும்' ஜே கோஷம் போட்டபடி, உடன்வர, தலைவர் பட்டாபி பவனிவந்ததையும், ஐம்பத்தைந்து அடி உயரமுள்ள மரத்திலே, கொடி ஏற்றப்பட்டதையும் கண்டு, யானை, குதிரை, ஒட்டகம் ஊர்வலத்தை அழகு செய்ய, நாடெங்குமிருந்து பல்லாயிரவர் பவனியில் கலந்து கொண்டதைக் கண்டும், மகாராஜாக்கள், திவான்கள், கவர்னர்கள், மந்திரிகள், ஆகிய உயர் பதவியினர் அங்கும் இங்கும் ஆர்வத்துடன் உலவக் கண்டும், பாலை வனம், இன்று மக்களின் முகமலர் நிரம்பிய சோலை வனமாக வன்றோ சோபிதக் காட்சியளிக்கிறது, எவ்வளவுகூட்டம்! எவ்வளவு உற்சாகம்! என்று கூறிக் களித்திருந்த மக்கள், பெருவாரியாக நிரம்பியிருந்த ஜெயபுரி காங்கிரசிலே, சர்தார்படேல் "மக்களின் முகத்திலே, சுதந்திர ஒளியும், எதிர்பார்க்கப்பட்ட ஆர்வமும் உற்சாகமும் காணப்படவில்லை, என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அடிமைத்தனத்தில் இருந்தபோது கூட, மக்களிடையே உற்சாகமும் ஆர்வமும் ஐக்கியமும் நிறைந்திருந்தது. அந்த உற்சாகமெல்லாம் எங்கே போயின?" என்று கேட்டார்.

ஒரு கணம், மக்கள் திகைத்தே போயிருப்பர், அவர் உரை கேட்டு. திருவிழாக் காண்கிறோம், களிக்கிறோம்! இக்கெட்டும் நாட்டின் புகழ் பரப்பும் தலைவர்களைக் காண்கிறோம், களிக்கிறோம்! ஏகாதிபத்யம் ஒழிந்த பிறகு முதன் முதலாகக் கூடுகிறோம், களிக்கிறோம்! சிறையில் இருந்தவர்களெல்லாம், நாடாளும் நாயகராயினர், நம்மை வாழ்விக்க வந்தனர், என்று எண்ணிப் பூரிக்கிறோம். காட்சி ரம்மியமானது—களிப்புக்கு என்ன குறை? உற்சாகத்துக்கு என்ன தடை? ஒளி இல்லையா, நமது கண்களில்? ஏன், சர்தார், சோகிக்கிறார்—என்று எண்ணித் திகைத்திருப்பர்.

சுதகளியும் பணி புரியும், கலைக் காட்சியும் பிறவும்கூட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவே மாநாட்டில், மகிழ்ச்சிக்கு என்ன குறை இருக்கப் போகிறது! என்று எண்ணியிருப்பர்! ஏன், சர்தார், ஏதோ, ஏக்கம் கொண்டவர் போலப் பேசுகிறார்? என்று எண்ணித் திகைத்துத்தான் இருப்பர்—ஒரு கணம். ஒரு கணம்! மறுகணம், அவர்களையும் அறியாது, மகிழ்ச்சி மங்கித்தான் இருக்கும்—ஏனெனில், உண்மை மனதைக் குடையத் தொடங்கி இருக்கும்.

ஜெயபுரியில் கூடினோம் விடுதலை பெற்ற நாட்டவர் என்ற முறையில்—ஆனால், வாழ்விலே ஓர் புதுமை கண்டோமா? வளம் வளரக் கண்டோமா? புதிய தொழிற்சாலைகளின் அட்டவணை, வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதற்குப் புள்ளி விவரம், இவைகளையா காண்கிறோம். இல்லையே! ஏன் இல்லை!—என்று மக்களும், எண்ணத் தொடங்கி, சர்தார் கூறியது சரிதான், நம்மிடம் உண்மையான உற்சாகம் இல்லை, காரணம், நமது வாழ்விலே இன்ப ஒளி இன்னமும் வீசவில்லை, என்று மனதிற்குள் கூறிக்கொண்டிருப்பர்.

அந்த உற்சாகம் எங்கே சென்றது?—என்று கேட்டார் சர்தார்—நாம் கூறுகிறோம் — எதிர்க் கட்சியினர் என்ற முறையிலே அல்ல—அந்த உற்சாகம், மக்கள் முகத்தை விட்டு விலகி, அதோ ஜெயப்பூர் ஜோத்பூர், பவநகர் நவநகர், பாடியாலா பிகானீர், மைசூர் கொச்சி, திருவிதாங்கூர், போன்ற மகாராஜாக்களின் முகத்திலே குடியேறிவிட்டது! டாட்டா, பிர்லா, பஜாஜ் டால்மியா போன்றோரின் அகத்திலே குடியேறிவிட்டது! கிலிகொண்டிருந்த கிரீடம் தாங்கிகள் இன்று மகிழ்கின்றனர்—அவர்களிடம், புதியதோர் ஆர்வம், உற்சாகம், மலர்ச்சி இருக்கிறது—டாட்டாக் கூட்டத்தாருக்கு இவ்வளவுடன் புதியதோர் தைரியம்கூட இருக்கிறது—மக்களிடந்தான், சர்தார் கூறியபடி, மகிழ்ச்சி இல்லை, ஆர்வம் இல்லை, உற்சாகம் இல்லை!

முன்பெல்லாம்—அதாவது சர்தார் குறிப்பிடுகிறாரே, அடிமைத்தனத்தில் மக்கள் இருந்த காலம்—அப்போதெல்லாம், இந்த முடிதாங்கிகளும் முதலாளிகளும், பயந்து வாழ்ந்தனர்—எந்த நேரத்தில் தங்கள் வாழ்வுக்கு என்ன ஆபத்து நேரிடுமோ, எந்தச் சமயத்திலே புரட்சிப் புயல் வீசித் தங்கள் பட்டமும் கொட்டமும் பறிக்கப்பட்டுவிடுமோ, பட்டினிப் பட்டாளத்தின் கோபம் எந்தச் சமயத்திலே, எந்தரூபத்திலே வந்து தாக்குமோ, என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தனர்.

மேடைகளிலே காங்கிரஸ் பிரசங்கிகள், "இந்த ராஜாதி ராஜர்களின் கோலாகல வாழ்வும், முதலாளிமார்களின் அட்டகாசமும், பிரிட்டிஷார் இருக்கிற வரையில் தான்! பிரிட்டிஷ் சிங்கத்தை வீழ்த்தி விட்டால், இந்தச் சிறுநரிகள், எம்மாத்திரம்!"—என்றுபேசியபோதெல்லாம், அவர்கள் பீதி கொண்டனர்.

மக்கள் மகிழ்ச்சியுடன் இருந்தனர்— நம்பிக்கை கொண்டதால் — நாட்டிலே செல்வத்தை நாசம் செய்யும் நச்சுப் பூச்சிகள் உள்ளன, அவை நசுக்கப்பட்டுவிட்டால், நமது வாழ்வு வளமாக நாட்டுச் செல்வம் பயன் படும் என்று நம்பினர், மகிழ்ந்தனர்! அதனால்தான், சர்தார் படேல், கூறியபடி, அடிமைத் தனத்தில் மக்கள் இருந்தபோது ஓர் ஆர்வம், மகிழ்ச்சி, காணப்பட்டது. காணப்பட்டது, என்பதுகூட பொருத்தமானதல்ல, ஆர்வம் ஊட்டப்பட்டது!—என்பதே பொருத்தமான பதம்.

இன்னும் ஒரு இரண்டு அடி ஆழம்தான் வெட்டவேண்டும் — ஆருடக்காரர் சொன்ன, அளவு குழி காண! தோண்டியானதும், குடங்கள் பத்து இருக்கும், அவை நிறையத் தங்க மோகராக்கள் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் புதையல் பெற, குழி தோண்டுபவன்,

பாடு படும்போது, நம்பிக்கை தரும் பலத்தையும் உற்சாகத்தையும் உடையவனாகவே இருக்கிறான். ஆரூடக்காரன் குறித்தபடி, "அரும்பொருள் புதைபட்டிருக்கும் இடம்" என்று அவன் நம்பியிருந்த இடத்திலே, குடமும் இருக்கக்கண்டால், குதூகலம் பிறக்கத்தானே செய்யும்! குதூகலத்துடன், குடத்தின் மூடியை உடைத்து, ஆவலோடு உள்ளே பார்க்கும்போது, ஏதோ ஓர் வகை நச்சுப்புகை உள்ளிருந்து வெளிப்பட்டு, அவன் நாசியைத் துளைத்து, இரத்தத்தைச் சொரிய வைத்தால், அவன் மனநிலை என்ன ஆகும்? பித்தன் ஆவான்! அல்லது பிணமாவான்!

நச்சுக்காற்றுக் கிளம்பாமல், நல்ல மோகராக்களே கிடைக்கின்றன, என்று வைத்துக்கொள்வோம். பாடுபட்டோம் பலன் கண்டோம், என்று அவன் பூரித்து, மோகராக்களைக் கீழே கொட்டிக் கணக்கெடுத்து, ஆறு இலட்சத்து அறுபதினாயிரம், என்று ஆர்வத்தோடு கூறும்போது, "அவ்வளவும் நமக்குச் சொந்தம். அள்ளிப்போடு, இந்தப் பெட்டியில்" என்று கூறிக்கொண்டு, அடி ஆட்கள் பலர் புடைசூழ அந்தப் பக்கத்துக் காட்டுராஜா வந்து நின்றால், புதையல் கண்டவனின் அகமும் முகமும் என்ன ஆகும்? தோண்டும்போது இருந்த ஆர்வம், உற்சாகம், இருக்குமா?

மக்கள், விடுதலைப்போரின்போது, நம்பிக்கை காரணமாக, ஆர்வம் கொண்டவர்களாகத்தான் இருந்தனர். விடுதலைப்போர் முடிந்த பிறகு, பலன் படாடோபக்காரருக்குச் சென்றதால், மக்கள் முகம், மலராத நிலையில் மட்டுமல்ல, கருகிய கமலமாகக் காணப்படுகிறது! கபடரும் கயவரும் களிக்கின்றனர்—காத்துக் கிடந்தவர்கள், காய்ந்த வயிறினராகவே உள்ளனர். காட்சிகள்—ஜெயபுரி காட்சிகளைப்போல—காணும்போது ஆராவாரம் செய்கின்றனர்—சிரிக்கின்றனர் சிந்து பாடுகின்றனர்—எனினும், உள்ளூர, நிலையான, மகிழ்ச்சி, உள்ளத்தில் இல்லை! எங்கே போயிற்று, அந்தப் பழைய உற்சாகம் என்று கேட்கிறார் சர்தார்! அரண்மனைகளில், மாளிகைகளில், குடி ஏறிவிட்டது! மக்களை விட்டுப்பிரிந்துவிட்டது!! மல்லிகைத் தோட்டக்காரனின் மகள், கூடை கூடையாக, மணமுள்ள மல்லிகையைக் கொண்டுபோய், தனவந்தர்களுக்கும், வாழ்க்கை வசதி பெற்றவர்களுக்கும் விற்றுவிட்டு, நாற்றமடிக்கும் அரிசியும், புழுத்துக்கிடக்கும் கிழங்குமன்றோ பெற்று வருகிறாள் குடும்பம் வாழ! மல்லிகை சிரிப்பது மாளிகைகளிலே!!

மக்கள் நம்பினர்—விடுதலைப்போர் முடிந்ததும், காலைமலர்ந்ததும் காரிருள் போவதுபோல, விதை தூவினால் முளைகிளம்புவது போல; வாழ்வு மலரும், என்று நம்பினர்—அந்த நம்பிக்கை அவர்களுக்கு, ஆர்வத்தை உற்சாகத்தைத் தந்தது. இன்று, விடுதலைப்போர் முடிந்து, வீடு திருத்தும் கட்டம் நடைபெறுகிறது—நடைபெறும் போது, மக்கள் மறக்கப்பட்டனர்—அவர்களின் தேவைகளும், உரிமைகளும் மறக்கப்பட்டன—அவர்கள் மனக்கண் முன் தோன்றித் தோன்றி அவர்களை ஆவேசமுறச்செய்த காட்சிகள் யாவும், ஊமையன்கண்ட கனவு போலாகிவிட்டன. உருவான பலன் காணோம். உற்சாகம் எப்படி இருக்கும்? ஆர்வம் எப்படி இருக்கும்?

யாராரின் கொட்டம் ஒழிக்கப்படும், ஆதிக்கம் அகற்றப்படும், என்று மக்கள் நம்பினரோ, அவர்களெல்லாம், நாடாளும் தலைவர்களின் நண்பர்களாகி விட்டனர். குவாலியர் மன்னரும் சர்தார் படேலும், குறுநகையுடன், ஒருவரை ஒருவர் வரவேற்கும் காட்சி! நேருவுக்கு மோட்டார் ஓட்டிக்கொண்டு, தமது நேர்த்தியான அரண்மனைக்கு அழைத்துச் செல்லும் காஷ்மீர் மன்னரின் காட்சி! பவநகரின் பவனி! நவநகருக்குச் சீமையில், இந்தியத் தூதுவர் தரும் விருந்து! எனும் இப்படிப்பட்ட காட்சிகளையன்றோ மக்கள் காண்கின்றனர்! களிப்பு எங்ஙனம் இருக்கும்?

சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.—எனவேதான், மக்களிடம், பழைய உற்சாகம் இல்லை, ஆர்வம் இல்லை!

நம்பிக்கைகள் நிறைவேற்றப் படவில்லை, என்று நாமல்ல, சர்தாரே, கூறுகிறார்—அதேதினம்! கூறிவிட்டும் கேட்கிறார், எங்கே போயிற்று அந்தப்பழைய உற்சாகம் என்று? தேள் கொட்டினால், தெம்மாங்கா பாடுவார்!!

நம்பிக்கை நிறைவேற்றப்படாததை ஒப்புக்கொண்டு பேசும் சர்தார், அதற்கு ஒரு காரணம் கூறுகிறார்.

சுதந்திரம்கிடைத்தஉடனே நமது தலைவர் மகாத்மாவின் போதனைகளை மறந்து விட்டோம்.—என்று கூறுகிறார். யார்? ஏன்? சர்தாரின் பேச்சிலே இதற்குப்பதில் இல்லை!

மகாத்மாவின் போதனைகளை மக்கள் யாரும் மறந்துவிடவில்லை—அன்பு — சத்தியம் — அகிம்சை—எதையும் அவர்கள் அன்று போல் இன்றும் போற்றித்தான் வருகிறார்கள், போதனைகளை மறந்தவர்கள், மக்களல்ல — மக்களை ஆளும் மாபெருந்தலைவர்கள் மறந்தனர்! போதனைகளைமட்டுமா? தங்கள் வாக்குறுதிகளையும் மறந்தனர்.

ஆயிரமாயிரம் தடவை, எள்ளி நகையாடி இருப்பர், சர்வதேச சங்கத்தை—மேனாட்டு அமைப்புகளை, கனலைக் கக்கியிருக்கின்றனர், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய ஸ்தாபனத்தைப் பற்றிப் பேசநேரிடும்போல்லாம்.

சின்னாட்களுக்கு முன்புகூட, சீற்றத்துடன், கண்டித்துப் பேசினார் சர்தார்படேல், ஐக்யநாடுகள் சபையைப்பற்றி. உடனே, எதிரொலி இதழ்கள், எக்காளமிட்டன, இந்தப் போலிச் சங்கங்களால் சுண்டைக்காய் அளவு பலன் கூடக்கிடையாது என்று!

ஜெயபுரியில், தீர்மானம் நிறைவேற்றுகிறார்கள் தலைவர்கள், ஐக்யநாடுகள் சபையினை ஆதரித்தும், காமன் வெல்த்தில் இந்தியா இருக்க வேண்டும் என்றும்.

யார் எதிர்பார்த்தனர் இதனை! பிரிட்டிஷ் அமைப்பு, சாம்ராஜ்ய சங்கம்! இதிலே, ஆஸ்திரேலியா, கனடா, ஆப்பிரிக்கா, போன்ற நாடுகள், உள்ளன—பிரிட்டிஷ் ஏகாதிபத்யப் பிணைப்பிலே இருந்த நாடுகள்—இந்தப்பிணைப்பின் காரணமாக, பிரிட்டன், ஏதேனும் ஒரு நாட்டின்மீது போர் தொடுத்தால், சங்கத்தில்உள்ள நாடுகள் போரில் ஈடுபடும். இது நடைமுறை. இது தெரிந்திருந்தும், காமன்வெல்த்தில் இந்தியா இருக்க வேண்டும், என்று தீர்மானம் நிறைவேறுகிறது ஜெயபுரியில்! மக்கள் எங்ஙனம் மகிழ்வர்?

காமன்வெல்த்தில் உள்ள ஆஸ்திரேலியா, இந்தியரைத் தனது நாட்

(13-ம்பக்கம் பார்க்க)

# லாபத்தில் பாட்டாளிக்கு பங்கு கொடுப்பதின் பலன்

இலாபத்தில் தொழிலாளர்களுக்குப் பங்குகொடுக்கும் திட்டம் தொழில் ஸ்தாபனங்களில் அமுலுக்கு வருமானால் தொழிலாளர், முதலாளிகள் ஆகிய இரு சாராருக்கும் நன்மை ஏற்படுவதுடன், உற்பத்தி பெருகி, தேச மக்கள் சுபிட்ச நிலையை அடைவார்கள். அமெரிக்காவில் ஒரு கம்பெனியில் இலாபத்தில் தொழிலாளருக்கும் பங்கு கொடுக்கும் திட்டம் அமுலுக்கு வந்த பின் தொழிலாளர்களும் முதலாளிகளும் எத்தகைய இலாபமடைந்தனர் என்பதை இந்தக் கட்டுரை விளக்குகின்றது.

அமெரிக்காவில், நியூ ஜெர்ஸி மாகாணத்திலுள்ள ரிட்ஜ்பீல்ட் பார்க்கிலிருக்கும் காண்டினன்டல் பேப்பர் கம்பெனியில், உற்பத்தியில் தொழிலாளருக்கும் பங்கு கொடுக்கும் திட்டம் 1947 ஜூலை மாதம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தத் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு இந்தக் கம்பெனியிலுள்ள தொழிலாளர்கள் கம்பெனியின் இலாபத்தைக் கருதி சிக்கன முறைகளை அனுஷ்டிப்பதில்லை. சிக்கன முறைகளை அனுஷ்டிக்கும்படி அவர்களைத் தூண்டவும் கம்பெனி முதலாளிகளால் முடியவில்லை. இப்போதெல்லாம் இந்தக் கம்பெனியிலுள்ள தொழிலாளர்களில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் சர்வ ஜாக்கிரதையாக சிக்கன முறைகளை அனுஷ்டிக்கின்றனர். ஒரு சிறு துண்டு காகிதத்தைக் கூட அவர்கள் நாசம் செய்வதில்லை. காகிதத் துண்டுகள் வீணாகக் குப்பைத் தொட்டிக்கு போகாதபடி தடுத்து, அவைகளைத் தொழிலாளர்கள் தங்கள் கம்பெனியின் நலனுக்காகப் பல்வேறு வகையில் உபயோகப்படுத்தி வருகின்றனர்.

தொழிலாளர்களுக்கு இலாபத்தில் பங்கு கொடுக்கும் திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவந்த 16 வாரங்களில், உபயோகமற்ற டுவயின் நூல்களைச் சேகரித்ததால் கம்பெனிக்கு 3100 டாலர் இலாபம் கிடைத்தது என்று அறிவிக்கப்படுகின்றது.

அறுந்த டுவயின் நூல்களையும் கழிவு தாள்களையும் மாத்திரமல்ல, இந்தக் கம்பெனியிலுள்ள தொழிலாளர்கள் சேகரித்துக் கம்பெனியின் இலாபத்துக்காக உபயோகப்படுத்துவதில் வேறு பல வகைகளிலும் அவர்கள் தங்கள் கம்பெனியின் இலாபத்திற்காக உழைக்கின்றனர்.

காண்டினன்டல் பேப்பர் கம்பெனியார் ஒரு தடவை டன் ஒன்றுக்கு 2 டாலர் வீதம் 9 பேல்கள் கழிவுத்தாள்கள் வாங்கினர். கழிவுத்தாள்கள் அடங்கிய இந்த பேல்களில் டன் ஒன்றுக்கு 90 டாலர் விலையுள்ள நல்ல தாள்களும் இருப்பதை ஸால்வோட்டர் பாபினோ, ரால்ப் கிரீகோ ஆகிய இரண்டு தொழிலாளர்களும் கண்டனர். "நல்லதாள்கள் இந்த பேல்களில் இருப்பதால் நமக்கென்ன?" என்று இந்த இரண்டு தொழிலாளிகளும் சும்மா இருந்துவிடவில்லை. பேல்களில் "நல்லதாள்கள் இருக்கும் விவரத்தை இவ்விருவரும் உடனடியே கம்பெனியின் சூப்பர்வைசரிடம் தெரிவித்தனர். இதனால் கம்பெனிக்கு 273 டாலர்கள் இலாபம் கிடைத்தன. தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காகக் கம்பெனியார் ஏற்படுத்தியிருக்கும் நிதியிலும் 120 டாலர்கள் அதிகமாய்ச் சேர்ந்தன.

காகிதம் உற்பத்தி செய்வதற்கான பல கனிப்பொருட்களையும் ஒன்றாகச் சேர்த்து, அதிகாரிகள் விரும்பும் அந்தந்த ரக காகிதங்களை உற்பத்தி செய்யும் வேலையை ஆர்தர் பாஸ்கட் என்பவர் நிர்வகித்து வருகிறார். புதுரக காகிதம் ஒன்று தயாரிக்கும்படி சென்ற பனிக்காலத்தில் கம்பெனி டைரக்டர்களிடமிருந்து உத்தரவு வந்தது. இந்தச் சமயத்தில் காகித உற்பத்தி யந்திரத்தில் மற்றொரு ரக காகித உற்பத்திக்கான கனிப்பொருள் கலப்படம் மிச்சமாக இருந்தது. முன்புள்ள காலமாக இருந்தால் ஆர்தர் பாஸ்கட் இந்தக் கலப்படத்தை அப்படியே தூர வீசிவிட்டுப் புதுரக காகிதத்துக்கான கலப்படத்தைத் தயாரிக்க கனிப்பொருள்களைப் புது விகிதாசாரத்தில் சேர்த்திருப்பார். ஆனால் ஆர்தர் பாஸ்கட் இந்தத்தடவை அப்படிச் செய்யவில்லை. மிச்சமாக இருக்கும் கலப்படத்தைக் கீழே கொட்டினால் கம்பெனிக்கு நஷ்டம் என்று கண்டார். அவர் அந்தக் கலப்படத்தைக் கீழே கொட்டியிருந்தால் குற்றம் ஒன்றுமில்லை. முதலாளிகளும் சண்டை பிடிக்கமாட்டார்கள். ஆனால் ஆர்தர் பாஸ்கட் இந்தக் கலப்படத்தையும் புதுக் கலப்படத்தோடு சேர்ப்பதற்குத்தீவிர முயற்சி செய்தார். அந்த முயற்சியில் வெற்றியும் கிடைத்தது. ஆர்தர் பாஸ்கட்டின் இந்தமுயற்சியால் கம்பெனிக்கு 69. 48 டாலர்கள் லாபம் கிடைத்தது. இந்த லாபத்தில் 30.51 டாலர்கள் தொழிலாளர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது.

காண்டினன்டல் பேப்பர் கம்பெனி உட்பட 5 தொழில் ஸ்தாபனங்கள் நவீன முறையில் தொழிலாளிகளுக்கு சம்பளம் கொடுத்து வருகின்றன. இதனால் அந்த ஸ்தாபனங்களின் தொழில் திறன் மகத்தான நிலையை அடைந்திருக்கின்றது. இந்த நவீன சம்பள பட்டுவாடாத் திட்டம் சம்பந்தமாகக் காகித உற்பத்தி முதலாளிகள் ஸ்தல காகித உற்பத்தி தொழிலாளர்கள் யூனியனோடு ஒரு ஒப்பந்தம் செய்திருக்கின்றனர். இந்த திட்டத்தை வகுத்தவரின் பெயர் அலன் ரூக்கா. எனவே இந்தத் திட்டத்தை ரூக்கா உற்பத்தி—பங்கீடு திட்டம் என்று அழைக்கின்றனர்.

காண்டினன்டல் பேப்பர் கம்பெனியில் வேலை செய்யும் 400 தொழிலாளர்களின் முயற்சியால் அந்தக்கம்பெனிக்கு எவ்வளவு லாபம் கிடைக்கின்றதோ, அந்த லாபத்தில் 30.51 சதவிகிதம் தொழிலாளர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படும் என்பது இந்த திட்டம்.

காண்டினன்டல் பேப்பர் கம்பெனி நிர்வாகிகளுக்கும் தொழிலாளர்களுக்கு மிடையே ரொம்ப நாட்களாகத்தகராறு இருந்துவந்தது. யுத்தம் முடிந்த 15 மாதங்களில் தொழிலாளர்களுக்கு 3 தடவை சம்பள உயர்வு அளிக்கப்பட்டது. எனினும் தொழிலாளர்கள் திருப்தியடையவில்லை. முதலில் தங்களுக்கு கிடைத்த அடிப்படைச் சம்பளத்தைவிட 49% கூடுதல் சம்பளம் கிடைத்தும்கூட மேற்கொண்டு 15 பர்சண்ட் உயர்வு வேண்டுமென்று தொழிலாளர்கள் கேட்டனர். எனவே கம்பெனி நிர்வாகிகள்

அலன்ரூக்கரை அழைத்து என்ன செய்யலாம் என்று கேட்டனர்.

அலன் ரூக்கர் காண்டினண்டல் கம்பெனியின் நிர்வாக அமைப்பையும் சம்பளப் பட்டுவாடா முறையையும் நன்றாக பரிசிலனை செய்தார். கம்பெனியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்கள் உழைப்பால் முதலாளிகளிடம் இருக்கும் கனிப்பொருள்களின் மதிப்பை எவ்வளவு அதிகரிக்கிறார்களோ அதில் நிரந்தர சதவிகித தொகையொன்றையேபெற்று வருகிறார்கள் என்பதை அலன் ரூக்கர் கண்டார். இந்தச் சதவிகிதம் ஒவ்வொரு கம்பெனியிலும் ஒவ்வொரு விதமாக இருந்தது. ஆனால் ஒரே கம்பெனியை எடுத்துக் கொண்டால் லாப காலத்திலும் சரி நஷ்ட காலத்திலும் சரி தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் அந்தச் சதவிகிதம் ஏகதேசம் எப்போதும் ஒரே அளவாகத்தான் இருந்துவந்தது. எல்லாக்காலத்திலும் ஒரேவித சம்பளமே இருந்துவந்ததால் கண்ட பலன், தொழிலாளர் தகராறுகளும், மனவருத்தங்களும் தான். தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்வார்கள் அல்லது மானேஜர்கள் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைப்பார்கள். இரண்டு வகையிலும் மனக் கசப்புத்தான்.

இந்த நிலைமையைப் பார்த்ததும் அலன்ரூக்கருக்கு ஒரு யோசனை தோன்றியது. தொழிலாளருக்குக் கிடைக்கவேண்டிய வேதியத்தையும், நிர்வாகிகளுக்கு கிடைக்கவேண்டிய லாபத்தையும் ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் ஏன் நிர்ணயிக்கக் கூடாது என்பதுதான் அவருக்குத் தோன்றிய யோசனை.

1936-ம் வருஷம் முதல் 1940-ம் வருடம்வரையிலும் காண்டினண்டல் பேப்பர்க் கம்பெனியாரின் வரவு செலவு புள்ளி விவரங்களை அலன் ரூக்கர் கணக்குப்போட்டு பார்த்தார். தொழிலாளர்கள் தங்கள் உழைப்பின் பயனாக நிர்வாகிகளின் மூலதனத்தை எவ்வளவுஉயர்த்தினார்களோ அதில் 30-51 சதவிகிதம் தொழிலாளர்களுக்குச் சம்பளமாக கொடுக்கப்பட்டது என்பதை அலன் ரூக்கர் கண்டுபிடித்தார். இந்தச் சதவிகிதத்துக்கு மேற்பட்ட மாற்றம் எதுவும் எந்த வருஷத்திலும் ஏற்படவில்லை என்பதையும் அவர் கண்டு பிடித்தார்.

அலன் ரூக்கரின் ஆலோசனைக்கு இணங்கக்காண்டினண்டல் கம்பெனியார் தங்கள் தொழிலாளர்களுடன் கீழ்க்கண்ட ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். அதாவது தொழிலாளர்களின் உழைப்பால் எவ்வளவு லாபம் கிடைக்குமோ அதில் 30-51 சதவிகிதம் அவர்களுக்குச் சம்பளமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படும் என்பதுதான் அந்த ஒப்பந்தம். இந்த ஒப்பந்தப்படி தொழிலாளர்கள் ஊக்கமாக வேலைசெய்தனர். அதனால் கம்பெனிக்கும் தொழிலாளர்களுக்கும் மிகுந்த லாபம் ஏற்பட்டது.

தங்களுக்கு 15 சதவிகிதம் சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்ட தொழிலாளர்களுக்கு அவர்கள் விருப்பப்படி அதே சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்குமானால், தொழிலாளர்களுக்கு லாபம் இல்லை என்பதை அடியிலுள்ள உதாரணத்தைக்கொண்டு எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

கம்பனியில் 135 நீக்கிரோக்கள் வேலை செய்கின்றனர். அவர்களில் ஒருவர்பெயர் ஜிம்பிக்ஸ். இவருக்கு முன்பு வாரம் ஒன்றுக்கு 66.45 டாலர் சம்பளம் கிடைத்துவந்தது. 15% உயர்வு கோரிக்கையின்படி அவருக்கு மேற்கொண்டு வாரத்துக்கு 8.73 டாலர் கிடைத்திருக்கும். ஆனால் புதிய ஏற்பாட்டின்படி அவருக்கு வாரம் ஒன்றுக்கு 16.86 டாலர் அதிகப்படியாக கிடைத்து வருகின்றது. இந்தஇரட்டிப்புத்தொகையில் பாதி தொகையை ஜிம்பிக்ஸ் நேரடியாகவும் மீதி பாதியை இன்ஷுயூரன்ஸ் பென்ஷன் காரியங்களுக்காகவும் பெற்று வருகிறார்.

தொழிலாளர்களை இன்ஷியூர் செய்வது, அவர்களுக்கு பென்ஷன் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் முதலியன ரூக்கர் திட்டத்தின் அம்சங்களல்ல. தொழிலாளர் யூனியனுக்கும் முதலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படி இந்த ஏற்பாடுகளுக்கும் காண்டினண்டல் பேப்பர் கம்பெனியில்செய்யப்பட்டிருக்கின்றன. ஜிம்பிக்ஸ் இந்தக்கம்பெனியிலே எவ்வளவுநாட்கள் வேலைகள் செய்கிறாரோ அவ்வளவுநாட்களுக்கு அவருடைய இந்த தொகைகள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. கம்பெனியிலிருந்து விலகினால் இந்தச் சேமிப்புத்தொகைகள் அவரிடம் கொடுக்கப்படும். ஜிம்பிக்ஸ் தமது 65 வயது வரையிலும் இந்தக் கம்பெனியில்வேலை செய்தால் கனக்டிகட் இன்ஷியூரன்ஸ்கம்பெனியார், அவருக்கு அவருடைய மீதி ஆயுள்காலம் பூராவும் பென்ஷன் கொடுக்கின்றனர்.

காண்டினண்டல் பேப்பர் கம்பெனியாரின் அனுபவத்தைக் கொண்டு மேற்கூறிய திட்டத்தை நன்றாக விளக்கமுடியும். இந்த திட்டம் அமுலுக்கு வந்த முதல் 41 வாரங்களில் 48,00000 டாலர்மதிப்புள்ள கனிப்பொருள்களையும் இதர சப்ளைகளையும் கம்பெனியார் காகித உற்பத்திக்காக உபயோகித்தனர். இதைக் கனிப்பொருள்களிலிருந்து 96,25000 டாலர் விலையுள்ள காகிதம் உற்பத்தி செய்யப்பட்டது. எனவே கம்பெனிக்கு 48,25000 டாலர் இலாபம் கிடைத்தது. இதில் 14,70000 டாலர் தொழிலாளர்களுக்குக் கிடைத்தது.

இந்தத்தொகையில் 1,90000 டாலர் வாராந்திர விகிதத்தில் தொழிலாளர்களுக்கு சம்பளமாகப் பங்கிட்டு கொடுக்கப்பட்டது. இதன் பின் 2,80000 டாலர் மிச்சப்பட்டது. இந்தத் தொகையே தொழிலாளர்களுக்கு முன்பு இருந்த அடிப்படைச் சம்பளத்தின் 23 சதவிகிதமாகும். இதில் கால் பகுதி ஒரு ரிசர்வ் நிதியில் போடப்பட்டது. மீதி இருப்பதில் பாதி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளுக்குச் சென்றன. மீதியுள்ள தொகையை மணிக்கூறு அளவில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு அவரவர் வேலையின் அளவுக்குத் தகுந்தபடி பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது.

ரிசர்வ் நிதி, கம்பெனியின் பாதுகாப்புக்காகஉபயோகிக்கப்படுகிறது. ஏதாவது ஒரு மாதத்தில் தொழிலாளர்களால் போதிய அளவுக்கு கம்பெனிக்கு லாபம் கொடுக்க முடியவில்லையானால் மேற்படி ரிசர்வ் நிதியிலிருந்து பணம் எடுத்து, துண்டு விழும் தொகை சரிக்கட்டப்படும். ரிசர்வ்நிதி ரொம்பவும் குறைவாக இருக்குமானால் அது கம்பெனியின் துரதிருஷ்டம்.

ஒவ்வொரு வருஷமும் இரண்டு தடவை மேற்படி ரிசர்வ் நிதியின் கணக்குப் பார்க்கப்படும். அதாவது கிறிஸ்மஸ் பண்டிகைக்குச்சற்று முன்பும், விடுமுறை காலத்துக்கு சற்று

முன்பும் கணக்குப்பார்க்கப்படும். ரிசர்வ் நிதியில் ஏதாவது தொகை உபரியாக இருக்குமானால் அந்த உபரித் தொகையில் பாதி தொழிலாளர்களுக்கு பணமாகவும், மீதி பென்ஷன் ஏற்பாட்டிற்காகவும் பங்கிட்டுக் கொடுக்கப்படும். ஏதாவது தொகை துண்டுவிழுமானால் கம்பெனி அதை சரிக்கட்டுகிறது. எனவே ஒவ்வொரு ஆறுமாதத்திலும் அந்தரிசர்வ் நிதி புதிதாக ஆரம்பிக்கப்படுகின்றது.

கம்பெனிக்கு மொத்த லாபத்தில் 69 49 சதவிகிதம் கிடைக்கின்றது. நிர்வாக சம்பளங்கள், விடுமுறை சம்பளங்கள், வரிகள், பென்ஷன்கள் நிர்வாகசெலவுகள், பென்ஷன் செலவுகள், இன்ஷியூரன்ஸ் செலவுகள், தளவாட நஷ்டங்கள், போக்குவரத்து செலவுகள், டிஸ்கவுண்டுகள், தளவாடமாற்ற செலவுகள், பங்குதாரர்களுக்கு வட்டி முதலியவைகளை இந்தத்தொகையிலிருந்துதான்செலவு செய்ய வேண்டும். இந்தச் செலவு போக ஏதாவது மீதி வந்தால் அது கம்பெனிக்குக்கிடைக்கும்லாபம்.

இந்தப்புதுஏற்பாட்டின்படிதொழிலாளர்களும் நிர்வாகிகளும் நன்கு உழைத்தனர். அதன் பயனாக அதிக லாபம் ஏற்பட்டது. இதைக் கண்டு வெளியிடத்தார் எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். (தி—ச)

# "கடவுள் தண்டிப்பார்!"

—✻—

காத்தான் நல்ல பலசாலி. வம்புச் சண்டையை விலைக்கு வாங்குவதில், அவனுக்குத்தான் முதல்பரிசு தரவேண்டும். 'காத்தான் வருகிறான்' என்று சொன்னாலே போதும், அழுதகுழந்தையும் வாய்மூடிவிடும். அவ்வளவு பொல்லாதவன் காத்தான்—போக்கிரி! சட்ட புத்தகங்களிலே உள்ள விதிகள் அனைத்தும், காத்தான் விஷயத்தில் வெறும் எழுத்துக்கள் என்றுதான் சொல்லவேண்டும். அவன் பெயரை, அவனைக்காணாத நேரத்தில்கூட உச்சரிக்கப் பயந்துகொண்டிருக்கும் மக்களால், அவன் செய்யும் அக்கிரமங்களுக்கெல்லாம், ஒரு முடிவுகாண, நீதியின் துணையை நாட எப்படித் துணிவு ஏற்படும்? அவனைக்கண்டாலே மூச்சுப் பேச்சு அற்றுப் போகிறவர்களால், அவனுக்குவிரோதமாகச் சாட்சியங்கூற, எவ்வாறு இயலும்? காத்தான் களவாடினாலும், கற்பழித்தாலும், அநியாயமாகப் பிறரை நையப் புடைத்தாலும், தீங்குபல புரிந்தாலும், மற்றவர்கள், அதனைக்கண்டும் காணாதவர்கள்போல் இருந்துவிடுவர். எனவே, காத்தான் ஒரு தனிக் காட்டு ராஜாவாகக் காலங்கழித்து வர முடிந்தது. அவன் கண்சிமிட்டல் கட்டளையாகவும், அவன் வாய்ச்சொற்கள் நீதிக்கோவையாகவும், அவன் செயல்கள் நல்லதீர்ப்பாகவும் அமைந்து விட்டன!

காத்தான் முன்னிலையில்தான், அவனைப்பற்றி ஏதாவது கூற மக்கள் பயந்தனரேயன்றி, ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுதும், ஒன்றுகூடிப் பேசுகிற காலத்திலும், அக்கம்பக்கம் பார்த்து, காத்தானின் கொடுமைகளைக் குறித்து முணுமுணுக்காமல் இருப்பதில்லை. அதுசமயம் அவர்கள் கண்களில் காணும் பரிதாபக் குறி, அவர்களின் நெஞ்சங்களில் சிறைவைக்கப் பட்டிருக்கும் காத்தான் பற்றிய பயங்கர நினைவுகளை உணர்த்தத் தவறுவதில்லை. உதடு வேறு கூறினாலும், உள்ளம் காத்தானின் அழிவுக்குச் சாபம் கொடுக்காமல் இருப்பதில்லை. அக்கிரமத்தை அறிந்தும், அதன்விளைவுகளைச் சொந்தத்தில் அனுபவித்தும், அதனைத் தடுத்துக்கொள்ள ஆற்றலற்றும், விடுபடுவதற்கான வழிவகை தெரியாமலும், அதற்கான துணிவு கொள்ளாமலும் இருந்தவர்கள், காத்தானைச் சபிக்கமட்டும் பின்வாங்கியதில்லை 'எப்படி இருந்தாலும், என்றைக்காவது ஒருநாளைக்குக் காத்தானைக் கடவுள் தண்டிக்கத்தான் போகிறார்!' என்ற நினைப்பும் தவறாமல் நினைத்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

* * *

"இதோ என் பணத்தைப் பார். அடுக்கடுக்காக உள்ள ஆடைகளைப் பார்—அதோ இருக்கும் அலங்கார அணிமணிகள் அனைத்தையும் பார்—அவ்வளவும் உனக்குத்தான்! அதற்கு ஈடாக உன்னை நான் செய்யச் சொல்வதெல்லாம் — உன்னிடத்திலிருந்து நான் எதிர்பார்ப்பதெல்லாம் —ஒன்றே ஒன்றுதான்!" இது காமுகனின் கனிவான வார்த்தை!

"உம்மிடத்தில் பணம் பாசி படிந்து கிடக்கிறது! பட்டாடைகள் பல இருக்கின்றன, அறிவேன்! விதவிதமான நகைகள் வேண்டிய அளவிற்குமேல் வைத்திருக்கிறீர்கள், தெரிகிறது! இவ்வளவாலும் உங்களுக்குச் சுகமில்லை. நீங்களே சொல்லுகிறீர்கள் வாய்விட்டு! சுகத்தைத் தேடுகிறீர், சுகம் கொடுக்கக் காத்திருக்கும் சுந்தரியை மறந்துவிட்டு! நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கும் சுகத்திற்காக, அது எவளிடத்திலிருந்து பெறமுடியாதோ, அவளிடத்தில் எதிர்பார்க்கிறீர், அவளிடத்தில் தஞ்சம் புகுகிறீர் அதற்காக!" காமுகனின் கைப்பிடியில் சிக்குண்டு தவிக்கும் மங்கை கூறுகிறாள் இப்படி!

"மரியாதைக்கு இது காலமில்லை. மருள் விழி படைத்த மான் குட்டி என்று நினைத்துக்கொண்டு, கனிந்த வார்த்தைகளால், என் கருத்தை வெளியிட்டேன். அதற்கு இசைய மறுத்து இதோபதேசம் புரிகிறாய். எனக்குத் தெரியாதா இவைகள் எல்லாம். என்னைவிட அதிகம் கற்றவள்போல் — எஜமான் இடத்தில் பேசுகிறோம் என்பதையும் மறந்து—நீட்டுகிறாய் உன்நெறியில் உள்ளதை. எனக்குத் தேவை உனது உடல்—உபதேசமல்ல!" இவ்வாறு கோபமாகக் கூறிக்கொண்டே கன்னியை நெருங்குகிறான் காமுகன்.

கன்னிப் பெண் கதறுகிறாள். அவள் அபயக் குரல்—காற்றில் கலக்கிறது—பிறர் காதுகளில் விழவில்லை. பெண்ணின் உள்ளமும் உதடும் சேர்ந்து பேசுகிறது, "உன்னுடைய அக்கிரமத்தைக் கடவுள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார். என்றைக்காவது, இதற்காக, கடவுள் தண்டிக்கத்தான் போகிறார்!"

* * *

வட்டிக்கடை வராகப்பருக்கு 'வள்ளல்' என்ற பட்டத்தை அவரால், சொந்தத்தில் கட்டிக்

(11-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 26—12—48 [ஞாயிறு


# அங்கே அப்படி! இங்கே இப்படி!

●

*ஜெயப்பூர் மாநாடு முடிந்துவிட்டது. அந்நிய ஆட்சி அகன்றபின் கூடிய காங்கிரஸ் முதல் மாநாட்டில், பெற்ற சுதந்தரத்தைப் பேணிக்காப்பதற்கான—வழி வகைகள் வகுக்கப்படுவதற்கான பல முக்கிய தீர்மானங்கள், விஷயாலோசனைக் கமிட்டியினரால் கொண்டுவரப்பட்டு நிறைவேறியுள்ளன! காங்கிரஸ்காரர்களிடையே ஒழுக்கம், நாட்டின் பொருளாதாரம் ஆகிய தீர்மானங்கள், விஷயாலோசனைக் கமிட்டியாரின் கவனத்தில் பெரும்பகுதியைக் கவர்ந்துவிட்டன.*

**நாடு விடுதலை அடைந்ததன்பயன், காங்கிரஸ்காரர்களிடையே ஒழுக்கக் குறைவை உண்டாக்கிவிட்டதேதென்பதை ஜெயப்பூர் மாநாடு படம் பிடித்துக் காட்டிவிட்டது.**

*காங்கிரசில்ஒழுக்கக் குறைவு அளவுக்கு மிஞ்சிவிட்டது என்று நாம் கூறினால், காங்கிரஸ் கண்மூடி அன்பர்கள் நம்மீது சீற்றங்கொண்டு, இது எதிர்க்கட்சிக்காரர்கள் காங்கிரஸ்மீது சுமத்தும் 'அபாண்டம்' என்று வாய்கூசாது கூறுவர்; என்றபோதிலும், உண்மையை உணர்ந்து ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற உயர்ந்த பண்பினர், ஜெயபுரி மாநாட்டின் நடவடிக்கைகளைக் கருத்தோடு படித்துப் பார்க்கும்போது, இது எதிர்க்கட்சிக்காரர் நம்மீது சுமத்தும் அபாண்டமல்லவென்பதையும், நம்முடைய கட்சியின் முக்கியஸ்தர்களே கூறும் உண்மை என்பதையும் உணர்வர். எனவே, எதிர்க்கட்சிக்காரராகிய நாம் இதுபற்றி விளக்கம் எதுவும் கூறவேண்டிய அவசியமில்லை. என்றபோதிலும், ஜெயப்பூர் மாநாட்டுநடவடிக்கைகளின் அட்டவணையாக இதனை எடுத்துக்காட்டாமல் இருக்க முடியவில்லை.*

*இந்நாட்டின் அரசியல் மொழியாக இந்திதான் அமைய வேண்டுமென்றுஜெயப்பூர்மாநாட்டில் பேசப்பட்டதாகவும் தெரிகிறது. பேசப்பட்ட விபரம்பத்திரிகைகளில் விளக்கமாக வெளியிடப்படவில்லை என்றபோதிலும், இந்தி ஆதரிப்பாளரின் கூக்குரல் கேட்டுப் பண்டித நேரு அவர்கள் மிகவும் வேதனைப் பட்டார் என்பதுமட்டும் பத்திரிகைகளில் இடம் பெற்றுள்ளது.*

> "இந்தி அரசியல் மொழியாக ஆக்கப்பட வேண்டுமோ என்பது வேறு விஷயம். அதை ஆதரித்து ஏன் கிளர்ச்சி நடைபெறவேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. முன்னர் இது போன்ற செய்கைகளை நான் எதிர்த்திருக்கிறேன், இன்றும் எதிர்க்கிறேன். நாளையும் அதை எதிர்ப்பேன். என்றும் அதை எதிர்த்து வருவேன்."

*என்று பண்டிதநேருபேசியிருக்கிறார். எங்கே? "இருபத்திரண்டுகோடி மக்கள் இந்தியைப் பேசுகிறார்கள்; எனவே இந்தியை நீங்கள் கற்றாக வேண்டும்" என்று நமது மாகாண முதல்வர் ஒரு குக்கிராமத்தில்—உத்தரமேரூரில் — ஒரு பத்து ஐம்பது பேர் முன்னிலையில் சின்னாட்களுக்கு முன்னர் பேசினாரே! அது போன்றதா பண்டிதரின்பேச்சும் இடமும்? ஆமென்று எந்த ஆராவமுதர்களும் கூறமாட்டார்களே! பண்டிதநேரு பேசியது ஜெயப்பூரில்! காங்கிரஸ் மாநாட்டில்! இரண்டு இலட்சம் மக்கள்கூடியிருந்த இடத்தில்! இந்தியே இந்நாட்டின் பொது மொழியாக வேண்டுமென்றுபோர்முரசு கொட்டுபவர்கள் முன்னிலையில்! விடுதலை பெற்ற நாட்டின் எதிர்கால வேலைத் திட்டங்களை எப்படி எப்படி தீட்டுவது என்ற யோசனைகளைக் கூறவும் —பெறவும் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில்தான் பண்டித நேரு அவர்கள், இந்தி ஆதரிப்பை,*

எதிர்த்திருக்கிறேன்

எதிர்க்கிறேன்

எதிர்ப்பேன்

என்றும் எதிர்த்தே வருவேன்

*என்று முழக்கமிட்டிருக்கிறார். இவ்வளவோடு அவர் நிற்கவில்லை. இந்தி ஆதரிப்பாளர்களுக்கு அவர் மேலும் சரியான சாட்டை கொடுத்திருக்கிறார்.*

> "இந்தி இயக்கத்தினருக்குச் சரியான இடத்தில் சரியான அழுத்தத்துடன் சரியான பதில் அளிப்பேன்"

*என்றும் பேசியிருக்கிறார். பண்டிதரின் இந்தப் பேச்சுக்கள், இந்தி ஆதரிப்பைப், பொறுத்த வரையில் எவ்வளவு வேதனையை உண்டாக்கியிருந்தால், அவர் இவ்விதம் பேசியிருக்கக் கூடும் என்பதனை இங்குள்ள இந்தி ஆதரிப்புச் சர்தார்களும் பிறரும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.*

*மழைக்குக் கூடப் பள்ளிக்கூடத் தாழ்வாரத்தில் ஒதுங்காத இங்குள்ள இந்தி ஆதரிப்பாளர்களின் ஆவேசப் பேச்சுப்போன்றதென்று பண்டிதரின் பேச்சை எண்ணிவிடமுடியுமா? அல்லது கேட்பார் பேச்சைக்கேட்டு ஏமாந்து பேசிவிட்டார் என்றுதான் கருதமுடியுமா? நாட்டின் இன்றைய ஆட்சிப் பொறுப்பு அவர் கையில் இருக்கிறது. நாட்டை ஆள்வதற்கு எதெது கருவியாக அமைய வேண்டுமென்பது அவருக்குத் தெரியாது, எனவேதான், நாட்டின் பொதுமொழியாக இந்தியை ஏற்கப் பண்டிதர் மறுக்கிறார் என்று எந்தக் காங்கிரஸ்காரராவது கூற முடியுமா? நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுள்ள பண்டிதருக்கு, எப்பவோ ஒருசமயத்தில், நாடு விடுதலை பெற்றுவிட்டால், அப்பொழுது இந்நாட்டின் பொது மொழியாக இந்தியைத்தான் அமைக்கவேண்டுமென்று காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானம் இப்போது ஏன் தேவையற்றதாகவும்—விரும்பத்தகாததாகவும் தெரிகிறதென்பதைக் காங்கிரஸ் அன்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டாமா?*

*விடுதலை பெற்ற நாட்டின் ஆட்சிப் பொறுப்பு, பண்டிதரின் கையில் விழுந்துவிட்டது. அவருக்கு, விடுதலை பெறுவதற்குமுன் நாடு இருந்த நிலையும், விடுதலை பெற்றபின் நாடு உள்ள நிலையும் நன்கு தெரிகிறது. தெரிவதனாலே தான், அவர், 'இந்தி அரசியல் மொழியாக ஆக்கப்பட வேண்டுமா என்பது வேறு விஷயம்' என்று கூறுவதன் வாயிலாக அதன் கிளர்ச்சிக்காரர்களுக்கு அறிவுரை புகட்டுகிறார், வேண்டாம் இந்தவேலை உங்களுக்கு என்று. மீறி இந்தக் கிளர்ச்சியில் இறங்கினால், இதுவல்ல*

இடம் உங்களுக்குப்பதில் அளிக்க; வேறு இடம் இருக்கிறது; அங்கே சரியான அழுத்தத்துடன் சரியான பதில் அளிப்பேன் என்று எச்சரிக்கை செய்கிறார். ஜெயப்பூரிலோ, விஜயவாடாவிலோ, கூவம்நதிக்கரையிலோ, வேறு எந்த இடத்திலோ காங்கிரஸ்காரரால் தீர்மானிக்கப்படும் எந்தத் திட்டமும் உருவாகி நடைமுறையில் கொண்டுவருவதற்கு உரிய ஒரு இடம் இருக்கிறது; அந்த இடத்தில்இந்தஇந்திஆதரிப்புக்குச் சரியான பதில் அளிப்பேன் என்று பண்டிதநேரு கூறுகிறார்.

ஆனால், இங்கு நடப்பதென்ன? இந்திதான் இந்நாட்டுப் பொது மொழி என்று பிரசாரம் செய்யப்படுகிறது. பிரசாரத்தோடு நிற்கவில்லை இவர்கள். இங்குள்ள பள்ளிக்கூடங்களில் இந்தியையே கட்டாய பாடமாகவும் ஆக்கிவிட்டனர். இவ்வளவோடும் இவர்கள் நிற்கவில்லை. இந்தி எதிர்ப்பாளர்களை சிறையில் வைக்கவும், தடியடி நடத்தவும் தங்களுக்குக் கிடைத்த 'அருமையான' அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றனர். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை வகுப்புவாதக் கிளர்ச்சி என்று வாய்கூசாது கூறுகின்றனர். காங்கிரஸ் சர்க்காரைக் கவிழ்க்கும் கபடச்செயல் என்று இங்குள்ள கருத்தில் உரமற்ற காங்கிரஸ்காரர்கள் கூறுகின்றனர்.

அங்கே, ஜெயப்பூரில், பண்டித் நேரு, இந்தி ஆதரிப்பாளர்களைக் கண்டித்து எச்சரிக்கை செய்கிறார்.

அதேபோது, அல்ல, அதே நாளில்,

இங்கே, கும்பகோணத்தில், பெரியார் இராமசாமி இந்தி ஆதரிப்புக்கு எதிராகப் பேசுகிறார்—இந்தி எதிர்ப்புக் கூட்டத்திற்கு விதித்த தடையை மீறுவதென்று முடிவுசெய்யத் தலைவர்களை அழைத்துப் பேசுகிறார்.

வடநாட்டுத்தலைவர் அங்கே இந்தி எதிர்ப்புப் பிரசாரம் செய்கிறார்

தென்னாட்டுத்தலைவர் இங்கே அதே பணியைச் செய்கிறார்.

ஆனால்...........!

அங்கே அவருடைய பேச்சுக்குக் கரகோஷம்! ஆரவாரம்!

இங்கே இவருடைய பேச்சுக்குக் கையில் விலங்கு! தடியடி தரையில் சாயும் அளவுக்குத் தரப்படுகிறது!

அங்கே அப்படி!

இங்கே இப்படி!

எப்படி இருக்கிறது, விடுதலை பெற்ற சுயராச்சிய சர்க்காரின் ஆட்சிமுறை!

யோசிக்கவேண்டாமா இங்குள்ள அவினாசியார்களும்பிறரும்,ஏன்பண்டித நேரு இந்தி ஆதரிப்பாளர்களை இவ்வளவு வன்மையாக கண்டிக்கிறார் என்று.

'இந்தி இந்நாட்டின் அரசியல் மொழியாக ஆக்கப்படவேண்டுமா என்பது வேறு விஷயம்' என்று பண்டித நேரு ஏன் இதனை அவ்வளவு அலட்சியப்படுத்திப் பேசினார் என்பதனையாவது இங்குள்ள இந்தி விரும்பிகள் எண்ணிப்பார்க்கவேண்டாமா?

நாட்டின் சமாதானத்தில் அக்கரையோடு, அரசியல் அறிவு சிறிதளவு இருப்பவர்கள்கூட இதனை எண்ணிப் பார்க்காமல் இருக்கமுடியாதே! நாட்டுக்கு ஒரு பொதுமொழி வேண்டுமென்றால்—அதற்கு இந்திதான் உகந்த மொழி என்றால், நாட்டின் ஆட்சிப்பொறுப்பையேற்று நடத்தும் பண்டித நேரு அவர்கள், இந்தியை ஆதரியாததுடன், அதனை ஆதரிப்பவர்களையும் கண்டிக்கிறாரே! இந்த நிலையில் நாம் இங்கு, பண்டிதரின் கண்டனத்துக்கு உட்பட்டிருக்கும் இந்தியையன்றோ கட்டாய பாடமாக்கி இருக்கிறோம்! இதுமட்டுமல்ல, நமது தலைவரின் கண்டனத்துக்குரிய இந்தியை எதிர்ப்பவர்களைத்தானே நாம் சிறையில் தள்ளுகிறோம்! தடியால் அடிக்கிறோம்!! நாடு சுடத்திக் காட்டில் கொண்டுபோய்விடுகிறோம்! ஆணோ, பெண்ணோ யாராய் இருந்தாலும் கண்ணையும் கருத்தையும் மூடிக்கொண்டு கண்டபடி வைகிறோம்! ஜெயப்பூரில், பண்டிதநேரு நிகழ்த்திய இந்தி எதிர்ப்புப்பேச்சையும், அதேசமயத்தில் கும்பகோணத்தில், இந்தி எதிர்ப்பாளர்கள் மீது நடத்தும் அடக்குமுறைக் கோர நிகழ்ச்சியையும் ஒரே சமயத்தில்—ஒரே பத்திரிகையில் படிக்கும் பிற நாட்டு அரசியல்வாதிகள் எங்களைப் பற்றி என்ன எண்ணுவார்கள்! என்பன போன்றவைகளையாவது நம் மாகாண 'அரசியல் அறிஞர்கள்' எண்ணிப்பார்க்க வேண்டாமா?

இன்று, நாடுள்ள சூழ்நிலையில் இந்நாட்டுக்கு ஒரு பொது மொழி தேவையா? அப்படித் தேவைப்பட்டாலும், அதற்கு எதனைப் பொது மொழியாக்கலாம்? இப்போது நடைமுறையில் பொதுமொழியாக இருக்கும் ஆங்கிலமே போதாதா? புதிதாக ஒரு பொது மொழியை உண்டாக்க வேண்டுமா? அப்படி உண்டாக்கப்படும் புதுப்பொதுமொழி எந்தெந்த வகையில், எந்தெந்த இடத்தில் பயன்படும்? பொதுமொழியென்றால் நம்முடைய தேவைகள் அனைத்திற்கும் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டுமே! வெளிநாட்டுத் தொடர்புக்கு ஒரு பொது மொழி! உள்நாட்டுத் தொடர்புக்கு ஒரு பொது மொழி! மாகாணங்களுக்கு வேறு தனித்தனி மொழிகள்! என்று இப்படி மொழிகள் இருந்தால், மக்கள் எந்தமொழியைக்கற்றுக்கொள்வது? எத்தனை மொழிகளைக் கற்றுக்கொள்வது? என்பன போன்றவைகளை எப்படி வரையறுப்பதென்ற குழப்பமான நிலையிலேயே மத்திய சர்க்கார் இன்னும் இருப்பதால்தான், பண்டித நேரு அவர்கள்,

"இந்தி அரசியல் மொழியாக ஆக்கப்படவேண்டுமா என்பது வேறு விஷயம்"

என்பதாக ஜெபப்பூர் மாநாட்டில் கூறி, இந்தி ஆதரிப்பாளர்களைக் கண்டார்.

நமக்கு ஆங்கிலேயர் பகைவரா? ஆங்கிலம் பகையா? ஆங்கில ஆட்சிமுறைபகையா? முன் இரண்டுமல்ல, பின்னதே நமக்குப் பகை என்பதை உணரும் எவரும், இப்போது நடைமுறையில் பொதுமொழியாக இருக்கும் ஆங்கிலத்தையே இனியும் பொது மொழியாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புவர். பண்டித நேரு அவர்களும் இதனை உணராமல் இருக்கமுடியாது. நமக்கு விடுதலை பெற்றுத் தர்தமொழி இந்தியா? ஆங்கிலமா? என்பதனை இங்குள்ள இந்தி ஆதரிப்பாளர்கள் உணர முடியாவிட்டாலும், பண்டித நேரு போன்றவர்கள் ஆங்கிலத்தையும், அதனால்நாம் அடைந்த-அடைகின்ற-அடையப்போகும் நன்மைகளையும் உணராமல் இருக்கமுடியாது.

ஆங்கிலம், அஞ்ஞான உலகத்தை விஞ்ஞான உலகமாக மாற்றிவிட்டதென்பதை யார் தான் மறுக்க முடியும்!

இந்தி, விஞ்ஞான உலகத்தையே அஞ்ஞான உலகமாக மாற்றிவிடும் என்பதனை யார் தான் மறுக்க முடியும்!

பண்டித நேரு அவர்கள் இந்த உண்மைகளை நன்கு உணர்ந்ததால் தான், மக்களை அஞ்ஞான உலகிற்கு அழைத்துச் செல்லும் இயல்போடு கூடிய சமஸ்கிருதக் கலப்பான இந்தி மொழி இந்நாட்டின் பொது மொழியாக ஆக்கப்படுவதைத் தாம் எந்தக் காரணத்தைக்கொண்டும் ஒப்புக்கொள்ள முடியாதென்று அவர் சென்னைக்கு வந்திருந்தபோது கூடக் கூறினார்.

இந்தச் சமஸ்கிருதக் கலப்பான இந்திமொழி, இந்நாட்டின் பொது மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்று யாராவது சட்டசபையில் தீர்மானம் கொண்டுவந்தால், அப்போது அவர் தம்முடைய முழுப் பலத்தையும் கொண்டே எதிர்ப்பதாகக் கூறினார். இதைவிட இன்னும் அதிகமாகவும், காரசாரமாகவும் ஜெயப்பூர் மாநாட்டிலே பேசியிருக்கிறார், இந்தி இயக்கத்தினருக்குச் சரியான இடத்தில் சரியான அழுத்தத்துடன் பதிலளிப்பேன் என்று. பண்டிதரின் இந்தப் பேச்சை இங்குள்ள இந்தி விரும்பிகள் எந்த வகையில் பொருள்கொண்டு விளங்கிக் கொள்வார்களோ நாம் அறியோம். ஆனால், பண்டிதரின் இந்தப் பேச்சு, சமஸ்கிருதம் இந்நாட்டில் நடமாடுவதை அறவே விரும்பவில்லை என்பதையும், சமஸ்கிருதத்தால் இந்நாடு அடைந்துள்ள கீழ்நிலையையும் நன்குவிளக்கிக் காட்டி விட்டதென்பதையும், சமஸ்கிருதமே இந்நாட்டின் பொதுமொழியாக வேண்டுமென்று பாடுபடும் தோழர் சி. ஆர். ரேட்டி போன்றோரும் உணராமல் இருக்கமுடியாது.

சமஸ்கிருத அறிவோ அல்லது அதன் வளர்ப்புப் பிள்ளையான இந்தி அறிவோ, நாட்டு நலன் குறித்துச் செய்யப்படும் எந்தப் பணிக்கும் ஏற்புடையதல்ல என்பதனாலேயே, உயர்ந்த — உண்மையான கருத்துக்கள் எவையும் சமஸ்கிருதத்தை வேராகக்கொண்டு முளைத்த எந்த மொழிகளிலும் இல்லை என்றும், அவற்றைப் பரப்பும் முயற்சிக்குத் தாம் எதிரியாகவே இருப்பேன் என்றும் ஒளிவு மறைவு இன்றிப் பண்டிதநேரு வெளிப்படையாகவே கூறிவிட்டார்.

ஆனால், இங்கு? "எனக்கு மந்திரி சபையில் இடம் கிடைக்காவிட்டால் நான் கடலில் விழுந்து சாகவேண்டியதுதான்" என்று அச்சுறுத்தி மந்திரியாகும் அளவுக்குத் தங்கள் பதவி மோகத்தைக் காட்டிக்கொண்டவர்கள், தங்கள் பதவிக்குப் பாதுகாப்பளிப்பது இந்திப் பிரசாரம் ஒன்றுதான் என்று எண்ணிக்கொண்டு, இந்தி இருபத்திரண்டு கோடி மக்களால் பேசப்படுகின்றது; எனவே நீங்களும் இந்தியைப் படியுங்கள்; அப்போதுதான் மத்திய சர்க்காரில் வேலை கிடைக்கும் என்று கூக்குரல் போடுகிறார்கள்.

மத்திய சர்க்காரில் இந்தி பற்றிய தீர்மானமே கொண்டுவரக்கூடாது; அப்படிக் கொண்டுவந்தால், அந்தத் தீர்மானத்தைத் தம்முடைய முழுப் பலத்தையும் கொண்டு எதிர்ப்பேன் என்று பண்டிதநேரு கூறுகின்றார். ஆனால், இங்கே, இந்தி படித்தால் மத்திய சர்க்காரில் வேலை கிடைக்கும் என்று கூறுகிறார்கள் கூச்சமின்றி! அங்கே பண்டிதரின் இந்தி எதிர்ப்புக்குக் கரகோஷம்! இங்கே, பெரியார் இராமசாமியின் இந்தி எதிர்ப்புக்குக் கையில் விலங்கு! தடியடி! அங்கே அப்படி! இங்கே இப்படி!

✻

## கும்பகோணத்தில்

—

கும்பகோணத்தில் தடியடி தர்பார் நடத்தி, இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தும் உரிமைப்போர் வீரர்களை, அவர்கள் பட்ட காயங்களால் எழுந்து நிற்கவும் முடியாத நிலையில் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லும் அளவுக்குத் தங்கள் 'பலத்தைக்' காட்டிப் 'பசியை'த் தீர்த்துக் கொள்கிறார்கள் போலீசார்! இராம ராச்சியம் என்றால் இதுதான், பார்த்துக்கொள்ளுங்கள் என்று ஒத்திகை நடத்திக் காட்டுகிறார்கள் கும்பகோணத்தில்! இதுதான் அகிம்சா தர்மத்தை அவனிக்கு எடுத்து விளக்கும் 'முறை' என்பதையன்றோ கும்பகோணம் நிகழ்ச்சிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன! தேசத்தின் பிதா என்றழைக்கப்படும் காந்தியாரின் கட்டளைப்படி நாட்டை ஆள்கிறோம்; அதற்கு அத்தாட்சிப் பத்திரம் கும்பகோணத்தில் தயாரித்திருக்கிறோம், பாருங்கள் என்று கூறுவது போலல்லவா இருக்கிறது அங்கு நடக்கும் நிகழ்ச்சிகள்!

* * *

ஒழுக்கமுற், உயர்ந்த பண்பும் காங்கிரஸ்காரர்களிடத்தில் இல்லையென்று ஜெயப்பூர் மாநாட்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை வாபஸ் பெறும்படி பண்டிதர் வேண்டிக் கேட்டுக்கொண்டாரே, அவர் அவ்விதம் கேட்டுக்கொண்டது தவறு; உண்மையாகவே அந்தப் பண்புகள் எங்களிடத்தில் இல்லை என்பதை நடைமுறையில் செய்து காட்டுகிறோம் பாருங்கள் என்பதற்குக் கும்பகோணம் நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டாக நிற்பது கண்டு மகிழ்கிறோம்! அகிம்சா தர்ம ஆட்சி முறைக்கு அடிகோலிய இந்நிகழ்ச்சி சரித்திரத்தில் இடம் பெறும் அளவுக்கு வளர்வது கண்டு களிக்கிறோம்! அதேபோது, ஜெயப்பூர் மாநாட்டில் தோழர் சங்கரராவ் தேவ், "சீரிய ஒழுக்கம் என்ற உயர்ந்தபீடத்தில் தாங்கள் இருந்து வருவதாக இனிக் காங்கிரஸ்காரர்கள் கூறிக்கொள்ள முடியாது" என்று கூறியசொற்களும் எங்கள் நினைவுக்கு மீண்டும் வருகின்றன. மேலும் உற்சாகம் பிறக்கிறது, எங்கள் கோரிக்கைகளும், கொள்கைகளும், திட்டங்களும் நிறைவேறுங் காலத்தை விரைவில் — எதிர்பார்த்ததைவிட மிக விரைவில் கொண்டு வருகிறது என்பதால்

எனவே, கும்பகோணம், மேலும் பல இடங்களுக்குப் பரவினாலும் அதனால் பதட்டமோ, பண்பை மறந்து செய்யுங் காரியங்களோ நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு திராவிடனுடையவும் கடமையாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் நமது தோழர்கள் மறந்துவிடக்கூடாது. தலைவர் பெரியார் கட்டளையும் இதுவே. வெற்றி நமதே!

✻


## இந்தி மறுப்புப் பாடல்கள்

—

புதுவைச் சிவம்

இயற்றியது.

விலை அணா 3

ஞாயிறு நூற்பதிப்பகம்,

28, அம்பலத்தாடு அய்யர் மடத் தெரு,

பாண்டிச்சேரி.

## கடவுள் தண்டிப்பார்

7-ம் பக்கத் தொடர்ச்சி

கும்பாபிஷேகம் செய்யப்பட்ட கணபதி கோயில் திருப்பணிக்குப் பிறகு, சைவ மெய்யன்பர்கள் மனமுவந்து தந்தார்கள். வள்ளலுக்குப் பணம் வந்து சேர்ந்த கதை, மனித வரலாற்றுக் கதையைக் காட்டிலும் நீளமானது—மனமுடைச்சல் நிரம்பியது. அவருடையப் பணப்பெட்டியிலே உள்ள ஒவ்வொரு தம்படியும், விதவிதமான கதைகளைக் கூறும், சரித்திரச் சின்னங்களாகும். அண்டிமாண்டு எழுதும்போது 500 ஆக இருப்பது, பைசல் ஆகும்பொழுது 1500 ஆக வளர்ந்துவிட்டிருக்கும். கடன் பட்டவனுக்குத் தெரியாது இந்தச் செப்பிடு வித்தை. அடைபட்டுக் கிடக்கும் சிங்கம்போல் சீறுவான் கடன் பட்டவன். பலன் கிடைக்காது. பிறரின் அனுதாப வார்த்தைகள்கூட, அவனுக்கிருக்காது. கேலியும்—கண்டனமும் அவனைச் சுட்டுத்தகிக்கும். 'வள்ளல்' என்ற பட்டம், வட்டிக் கடைக்காரருக்கு, அவர் வைத்திருந்த பணத்தின் சக்தியைக் காட்டிலும், புதிய பலத்தை — எத்தகைய தாக்குதலையும் எதிர்த்து நிற்கவும், அழித்தொழிக்கவுமான வன்மையைக்—கொடுத்து விடுகிறது. எனவே, ஏமாற்றமடைந்த ஏழை — கடன் பட்டவன், 'இந்த அக்கிரமக்காரனைக் கடவுள் தண்டிக்கத்தான் போகிறார்!' என்று தீர்க்கதரிசனம் கூறுவதோடு ஆறுதல் பெற்றுவிடுகிறான்.

* * *

நடுநிசி. அமாவாசை தினம். வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் நன்கு உறங்கிக்கொண்டு இருக்கிறார்கள். கள்ளன் உள்ளே நுழைகிறான். இரும்புப்பெட்டியைஉடைக்கிறான். விழித்துக்கொள்ளுகிறார்கள் வீட்டுக்குடையவர்கள். பணந்தேடி, தனது கண்முன்னாலேயே, வந்த பொருள் தேடி, தான் இதுவரையில் சேர்த்து வைத்ததை எல்லாம் ஒன்றுவிடாமல் எடுத்துக்கொண்டு, கம்பி நீட்டத் தயாராவதைப் பார்க்கிறார்—பதைக்கிறார். வாய் திறக்க முடியாமல் மிரள மிரள விழிக்கிறார். கள்ளனின் கையிலே உள்ளபளபளப்பான கருவி, பணந்தேடிக்கு அச்சத்தை மூட்டுகிறது. இதன் பலனாக வாய் தான் பேச்சொழிந்ததே ஒழிய, நெஞ்சு ஒப்பவெடுத்துக் கொள்ளவில்லை. ஆத்திரமான சொற்களைக் கக்குகின்றன ஆரம்பத்தில். ஆனால், முடிவில், "இந்தக் கள்ளப்பயலை கடவுள் தண்டிக்கத்தான்போகிறார்' என்று கள்ளனுக்குக் கிடைக்க வேண்டிய நல்லதீர்ப்பை, கடவுள் தந்தாகவேண்டுமென நம்பிக்கையோடு கூறி நெஞ்சு திருப்திகொள்கிறது.

• • •

காத்தான் — காமுகன்—வள்ளல்—கள்ளன் — இவர்களுடைய நடத்தைகளால், கஷ்டநஷ்டப்பட்டவர்கள், அவைகளால் ஏற்பட்ட வேதனையைத் தாங்கமுடியாமல், ஆனால் கொடுமையை ஒழிக்க வேண்டும் — ஒழிக்கப்படவேண்டும் என்னும் உறுதியான முடிவோடு—"தவறி நடப்பவர்களைக் கடவுள் தண்டிப்பார்" என்று தங்களுக்கு நீதி வழங்க—கொடுமையைக் களைய—குறைகளைப்போக்க – பாதுகாப்பு அனைத்தும் அளிக்க, தங்கள் சக்திக்கு மீறிய-அக்கிரமக்காரர்களின் சக்தியைக் கருவறுக்கும் ஆற்றல் உள்ள ஒரு சக்தியை — பல மிக்க ஒன்றைத் தேடுகிறார்கள் — அது தேவையாகவும் இருக்கிறது — அது கிடைக்கவும் கூடும் என்றும் நம்புகிறார்கள். தேவை இருக்கிறது, வேதனை போக்கவேண்டிய அவசியம் தெரிகிறது, பாதுகாப்பின் முக்கியம் உணரப்படுகிறது, ஆனால் அதற்கான ஆற்றல் நிரம்பிய ஒன்று, மக்களால் உருவாக்கப்பட்டுப் பலகாலமாகப் பாதுகாத்து வளர்க்கப்பட்டு வரும் நம்பிக்கை, மக்கள்கோரிக்கைகளை நிறைவேற்றினது கிடையாது. மக்களில் சிறந்தவர்கள் — சிந்தனையாளர்கள்—எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவுதான் இன்று நாம் காணும் சாதனங்கள் அனைத்தும். சூதுமதியினர் கற்பித்துக் காப்பாற்றி வரும் வெறும் சொல்லால் ஆக்கப்பட்ட அற்புதம் அல்ல. இவைகளை இன்றைய உலகத்தில் இருந்து, நமது பார்வையில் படாமல் அகற்றி-அழித்துவிட்டால் நாடு காடாகும், மக்கள் மந்திக் கூட்டம் ஆவர்.

சுகவாழ்வு—சுதந்திரம்—உரிமை இவ்வளவும்தனிமனிதனுக்குஇருந்து தீரவேண்டிய, சத்தான பண்புகளாகும். இவ்வளவையும், ஒவ்வொருவருக்கும் அமைத்துத் தருவதும், இவைகளைச் சின்னாபின்னமாக்காமல் ஒழுங்காகப் பாதுகாத்துத் தருவதுந்தான், மக்களாட்சி முறையின் மாண்பாகும். இத்தகைய நல்லாட்சி முறையை அழிந்துபடாமல் பாதுகாத்து வரவேண்டிய பொறுப்பு, ஒவ்வொரு தனி மனிதனையுஞ் சார்ந்ததாகும். தனிநபருக்கு மட்டுமல்லாமல், தனி நபரின் உரிமைகளைக் கெடுத்துவிடாமல், சமூக நலனையும் பாதுகாத்து வருவதால், அரசாங்கத்தைக் காப்பாற்றவேண்டிய கடமை கொண்டவனாக ஒவ்வொரு பிரஜையும் இருந்து தீர வேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொருவனும் அனுபவிக்கும் உரிமையைப் பொறுத்துத்தான், அவனுடைய கடமைக் கோட்பாடும் அமைகிறது. இதுதான் மக்கள் ஆட்சி முறையின் அடிப்படை அமைப்புத் தத்துவம். இந்த அடிப்படையை மறந்து, அரசாங்கத்தை நடத்தும்—எம்முறையிலாயினும் — பொறுப்பேற்றுள்ளவர்கள், நடந்துகொள்வார்களானால், அதன் பலனாக, ஏற்படும் சீரழிவுக்குட்பட்ட மக்கள், வேதனையைப் போக்கிக்கொள்ள, சில பல நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டிய நினைப்பை—தாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்— பெற்றுவிடுகிறார்கள். நிலைகொள்ளாத தண்ணீரில் தள்ளப்பட்ட ஒருவன், ஒழுங்காக நீந்தத் தெரிந்தாலும் தெரியாமல் போனாலும், உயிர் பிழைத்துக் கரை சேர, கைகால்களை உதைத்துக் கொள்ளுவது இயல்புதானே?

ஒரு நேர்மையான அரசாங்கம், மக்களுக்குச் செய்து தீரவேண்டிய கடமைகளை உதறித் தள்ளிவிட்டு, மக்களை மட்டும், அரசாங்கத்தைப் பலப்படுத்தும் பணியில் அவர்களுக்குள்ள கடமையைமுன்தள்ளிப் பேசுவது, மாசடைந்துள்ள மனத்தின் மதிப்பற்ற வார்த்தைகள் என்றுதான் கூறவேண்டும். மக்கள் நலம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டிருக்கும், அரசாங்கத்தை நடத்தும் எந்த நபரும்; தான் தவறிய கடமையை, தான் மக்களுக்கு ஆற்றவேண்டிய பணியை, மறந்து மன்னித்துவிட்டு, தங்கள் தங்கள் கடமையை மட்டும் செய்ய வேண்டுமென்று மக்களிடம் எதிர்பார்ப்பது கூடாது—நடவாது!

தங்களுடைய நோக்கத்தை மக்

கள் தெரிந்து கொள்ளாமல் இருக்க அல்லது தங்களின் தகுதியற்ற நிலையை மக்கள் உணர்ந்து கொள்ளாமல் இருக்க, வேறு துறையில் மக்களின் கவனத்தைத் திருப்ப முயலுவர். இந்த அரிச்சுவடியை அறிந்து கொள்ளாதவருக்கு அரசியல் உலகில் இடம் கிடையாது.

இன்று, நாட்டின் நிலை என்ன? முக்கியமான உணவுப் பொருளும், ஏழை மக்களால் வாங்கக்கூடிய விலையில் இருக்கவில்லை. அந்த அளவிற்கு, அவர்கள் வருமானம் உயரவில்லை. இந்தவகையில், எதிர்காலத்தில் நம்பிக்கையுடன் இருப்பதற்கும் ஏற்பாடில்லை. ஆனால் இதேநேரத்தில், மக்களின் தேவையை மறந்து பணம் பண்ணுவதில் சிலர் மூனைந்திருக்கிறார்கள். ஏற்கனவே, இத்துறையில் பணம் படைத்தவர்களின் பேராசைக்கு, பலலட்சம் மக்கள் பிணமாயினர். இது நடந்தது வெள்ளையர் ஆட்சியில். ஆனால் பணம் பண்ணினவர்கள், 'நமமவர்கள்!' கள்ளமார்க்கெட்காரர்களைத் தூக்கிலிடவேண்டும், என்று பேசினார் பண்டிதர் அன்று ஒருநாள். இழந்த நம்பிக்கையை மக்கள் பெற்றனர். மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் தான் பண்டிதர்போன்றார் என்ற நிலையும் ஏற்பட்டது. இதுநீடித்து நிலைத்து இருக்கவில்லை. குருதிபாய்கிறது—தூக்கு மேடைகளில் அல்ல—நடுத்தெருக்களில்! கள்ளமார்க்கட் கழுகுகளின் இரத்த மல்ல — துன்பந்துடைக்க வேண்டுமென்று கேட்பவர்களின் இரத்தம்! இவ்வளவும் நடப்பது பிறர் ஆட்சியில் அல்ல—சுயாட்சியில்!

"இன்று தேசமுள்ள நிலைமையில், உணவுப் பொருள்களைப் பதுக்கிவைப்பது அல்லது அது பொதுஜனங்களுக்குக் கிடைக்காமல் செய்வது, கொள்ளை லாபம் அடிப்பது போன்றகாரியங்களானவை மகாபாபமானகாரியங்கள். இதற்கு கடவுள் கட்டாயம் தண்டனை கொடுப்பார்."

இது 20-12-48 'தினமணி'யில் இருக்கிறது. இவ்வாறு கூறினது, சமயாச்சாரியல்ல! சதுர்மறை வேதியர் அல்ல! தத்துவசாஸ்திரி அல்ல! சர்வாதிகாரம் பெற்றுள்ள நிலைமினிருக்கும், காய்ந்தவர்களைக் கனல்கக்கும் கண்களைக்கொண்டு உருட்டிப் பார்க்கும், ஆளவந்த 'இரும்பு மனிதர்' பட்டேல் பேசுகிறார் இவ்வாறு.

சமஸ்தானாதிபதிகளிடத்திலா — அவர்கள்தான் இவருக்கு சாரதியம் செய்கிறார்களே-இல்லை! பிர்லாபஜாஜ்களிடத்திலா-அவர்கள்தான் இவருக்குப் பின்பலமாயிற்றே-இல்லை! பின் எவர் இடத்தில்? பிளவுபடுத்தப்பட்டு, வாழ்விழந்துகிடக்கும் தொழிலாளர்களிடத்தில், பட்டேல் பரமனைக் கூவி அழைக்கிறார், பொருள்களைப் பதுக்கும் பாதகர்களை தண்டிக்க! இவருக்கு இருக்கும் அதிகாரம், படைபலம், பதுக்கல் பாவிகளின் பக்கம் கூட எட்டிப் பார்க்க அஞ்சுகிறது போலும்! பரமனுக்கு மனுச் சமர்ப்பிக்கிறார், கைதேர்ந்த புரோகிதர் போல்!

தொழிலாளர்கிளர்ச்சியா, இதோ தடையுத்தரவு இருக்கிறது; எங்களுக்கு எதிரான கிளர்ச்சியா, இதோ இந்தியன் பினல்கோடில் ஏராளமான விதிகள் இருக்கின்றன—எச்சரிக்கை; இன்னோரன்னவற்றிற்கெல்லாம்; தாங்கமுடியாத வாழ்க்கைச் சுமையல் எடுத்துக்கொள்ளப்படும்செயல்களுக்கெல்லாம், தன்னம்பிக்கையோடு, ஒரு துளியும் தயங்காமல், தயவு தாட்சண்யம் காட்டாமல், படையை ஏவிப்பாட்டாளியின் பசியைப் பறக்கடிக்கும் பட்டேல், அது சமயம் பரமனை மறந்துவிடுகிறார்-பரமார்த்திகத்தைத் துறந்து விடுகிறார் பாட்டாளியைத்தண்டிக்கத்தான் பட்டேலுக்கு முடிகிறது! மக்களைப் பிணமாக்கிப் பணம் பண்ணும் பணமூட்டைகளைத்தண்டிக்க ஒருபரமன் தேவைப்படுகிறது!

கருத்தில் உரமும் கையில் அதிகாரமும் இல்லாத கோழையா பட்டேல்? கள்ளமார்க்கட்காரரைத் தண்டிக்கக் கடவுளை ஏன் அழைக்கிறார்? ஆளாளும் உத்தியோகம் பெற்றுள்ளவர் பட்டேல். தமக்குத்தான், அந்த தகுதி உண்டு என்று தலைவீக்கம்கொண்டிருப்பவர். அவர் ஆதரவற்றவர்களை — அனாதைகளை, தேவைகளை வெளியிடும் குற்றத்திற்காக, தண்டிக்கத் தனக்குத் தகுதியும் கடமையும் இருப்பதாக எண்ணிக்கொண்டிருப்பவர். இதனைச் செயலிலே காட்டிக்கொண்டு இருப்பவர். இவர் போக்கினால், பாதகம் டைந்தவர்கள், 'பட்டேலை கடவுள் தண்டிப்பார்' என்று, காலத்துக்குக் காத்திருக்கமாட்டார்கள்.

மந்திரவாதி-புரோகிதன்-கொடுங்கோலன்-மக்களை மயக்கக் கூறி வந்ததும், தன்னம்பிக்கையற்ற-கையாலாகாதவர்கள் சில நிமிஷ ஆறுதலுக்காக எதிர்க்காமல் ஏற்றுக்கொண்டதும், முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்ததுமான ஒரு சொல்லுக்கு, ஆளவந்தபட்டேல் உயிர் தருகிறார்! பட்டேலின் போக்கை—கல்முள் நிறைந்த பாதையை—கடவுள் தண்டிப்பார்! என்னும் சொல்லின் துணைகொண்டு, மக்களின் கண்களுக்குப் படாமல் மறைத்துவைக்க முடியாது. மக்கள் சக்திக்கு 'கடவுள் தண்டிப்பார்' எனும் வார்த்தை இனியும் கேடயமாக இருக்காது!


"திராவிடன்" அன்பர்களுக்கு அறிவிப்பு

சிலகாலமாக நிறுத்தப்பட்டிருந்த

"திராவிடன்"

14—1—49 வெள்ளியன்று

"பொங்கல் மலர்"

ஆகவும், அதைத் தொடர்ந்து எப்போதும் போல வார இதழாகவும் வெளிவரும்

பல அறிஞர்களின் கருத்தோவியங்களைக்கொண்ட "திராவிடன்" பொங்கல் மலர் 60 பக்கங்கள் விலை அணா 12

"திராவிடன் அலுவலகம்"

18, பெருமாள் முதலி தெரு :: ஜி. டி. சென்னை 1.

## எங்கே அந்த உற்சாகம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

டிலே இருக்க அனுமதிப்பதில்லை. இது ஏன், என்று பிரிட்டன் கேட்பதில்லை.

தென் ஆப்பிரிக்காவும் காமன்வெல்த்தில் இருக்கிறது, எனினும் இங்கு 'இந்தியர் இழிமனிதராக' நடத்தப்படுகிறார்கள்! ஏன் என்று கேட்க நேசநாடுகள் சபைக்கே, நாடி முறுக்குமில்லை, நோமைத் திறனுமில்லை. சாம்ராஜ்ய சிருஷ்டி கர்த்தாவான பிரிட்டனோ, பேசுவதில்லை இதுபற்றி.

இப்படிப்பட்ட சாம்ராஜ்யத்திலே இருக்க இந்தியா சம்மதிக்கிறது! நேசநாட்டு ஸ்தாபனமாகட்டும், பிரிட்டிஷ் காமன்வெல்த்தாகட்டும், மேனாட்டுக்காரரின் எந்த அமைப்பும், பலாத்காரத்தை, இம்சையை அடிப்படையாகக் கொண்டதுதான்! மகாத்மா உபதேசித்த மகத்தான அகிம்சா மார்க்கத்தைக் கடைப் பிடிக்கும் இந்தியா, இம்சைமுறையைக் கைக்கொள்ளும், மேனாட்டு ஸ்தாபனங்களிலே சேருவதுகூடாது. உலகுக்குத் தனிவழிகாட்ட, தர்மோபதேசம் செய்ய, அகிம்சா மார்க்கத்தைப்போதிக்க வேண்டியதே இந்தியாவின் கடமை. இந்தியா இம்சாவாதிகளுடன் சேரக்கூடாது—கண்டிப்பாகச் சேரக்கூடாது குறிப்பாகப்பிரிட்டிஷ் அமைப்பான, காமன்வெல்த்தில், சாம்ராஜ்ய சங்கத்திலே சேரவே கூடாது.

* * *

வீராவேசமானபேச்சு. பலஆண்டுகளாக, எல்லாக் காங்கிரஸ்காரருக்கும் பழக்கமான பேச்சு. இந்தியா, ஆத்மார்த்தத்துறையிலே, அதி உன்னதமான இடம் பெற்றிருக்கிறது—மேனாடுகளோ, கேவலம், மிருகசுபாவத்தைக்கொண்டவை, என்ற எண்ணத்தின்மீது கட்டப்பட்ட பேச்சு. இந்தியா, பலாத்காரத்தை நடைமுறையாகக்கொண்டுள்ள மேனாட்டுச் சங்கங்களிலே சேரக்கூடாது, என்று பேசினவுடன், ஆர்வத்துடன், எழுச்சியுடன், மாநாட்டினர், 'கரகோஷம்' செய்தனர்!

* * *

அகிம்சை! ஆம்! சிறந்த தத்துவம். அண்ணல் நமக்கு அளித்ததத்துவம்! ஆனால்............ஆனால்............நாம், அந்த அகிம்சா தர்மத்தின்படியா நடந்துகொண்டோம்? பாகிஸ்தான் தவறுபல செய்தது என்றே வைத்துக்கொள்வோம். அதற்காக? நாம் கையாண்டமுறை என்ன? அகிம்சையா? அண்ணல் காட்டிய வழி சென்றோமா? ரணகளமேற்பட்டது இந்தியாவில்! இந்த உண்மையை மறைக்கமுடியுமா? அகிம்சா மார்க்கத்தை நாம் கடைப்பிடிக்கத் தவறி விட்டோம். இப்படிப்பட்ட நிலையில் அகிம்சா தத்துவத்தை உலகுக்கு நாம் எப்படிப்போதிக்க முடியும்? இன்றைய உலக நிலையில், அகிம்சையைப்பற்றிப் பேசுவதால், பிரயோஜனம் எதுவும் இல்லை!

* * *

இவ்விதம் பேசினார், பண்டித நேரு! காமன்வெல்த் தொடர்பு இருந்தாக வேண்டும், என்று வாதாடினார். பலே! சபாஷ்! அச்சா! பஹூத் அச்சா!—என்று கோஷம் — இதற்கும் — ஆர்வத்துடன், கரகோஷம் கிளம்பிற்று ஜெயப்பூரில்!

* * *

இந்தியர்களுக்குச் சம அந்தஸ்து வழங்காத தேசத்தோடு இந்தியாவுக்கு எத்தகைய தொடர்பும் இருக்கக்கூடாது, என்று ஒருவர்பேசினார்.

உடனே, ஜெயபுரியினருக்கு மகிழ்ச்சி, எழுச்சி! தென் ஆப்பிரிக்காவிலே, இந்தியரை, இழிமனிதராகக்கருதி நடத்துகிறார்கள்! சிலோன், இந்தியரைத்துரத்துகிறது! ஆஸ்திரேலியா, இந்தியர், நுழையக்கூடாது என்று கூறுகிறது, இப்படித் 'திமிர்'கொண்ட நாடுகளுடன், இந்தியா தொடர்பு வைத்துக்கொள்ளத்தான் கூடாது — தேசிய சுயமரியாதை அதுதான்—என்று எண்ணினர், கரகோஷமிட்டனர்! உடனே, பண்டிதநேரு, ஒருதேசம் மற்றொரு தேசத்தோடு நீண்ட நாட்களாகக் கொண்டஉறவைத்திடீரெனஅறுத்துவிடமுடியாது. தென்னாப்பிரிக்கா போன்ற தேசங்கள் சம அந்தஸ்து வகிக்கும் காமன்வெல்த்தில் இந்தியா சேரக்கூடாது என்ற கருத்தில் உண்மைஇருக்கிறது. ஆனால், காமன்வெல்த் நாடுகளுடன் (தென் ஆப்ரிக்கா — ஆஸ்திரேலியா) உறவு கொள்வதால் உலக சமாதானத்துக்காகவும், உலக மக்கள் சுபீட்சத்திற்காகவும், உழைக்கமுடியும் என்பதாலேயே, நான், காமன்வெல்த்தில் இந்தியாசேரவேண்டும், என்றுகருதுகிறேன் என்பதாக முழக்கமிட்டார். உடனே, ஜெயபுரியினர்பலத்த கரகோஷமிட்டனர், ஆர்வத்துடன்.

* * *

இந்தியா, சுதந்திரநாடு! இதன் சக்தி அபாரம். எந்த வல்லரசுடனும் கூடிக் குலாவித்தான் பிழைத்தாக வேண்டும், என்ற சிறுநிலை இல்லை. முன்பு, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், இந்தியாவை, சுதந்திரமற்றதாகச் சர்வதேசவிவகாரத்தில்செய்துவைத்திருந்தது. இப்போது இந்தியா தன் விச்சைப்படிநடக்கலாம், ஏனெனில் இந்தியா இப்போது ஓர் சுதந்திரநாடு—என்றார் ஒருவர்—உடனே குதூகலம் — கரகோஷம்—ஜெயபுரியினருக்கு.

இன்றைய உலகநிலையில் உண்மையான சுதந்திரமுள்ள தேசம் எதுவும் இல்லை. பிறதேசங்களின் உதவி இன்றித் தனித்து நிற்கும்சக்தி என்றால், அமெரிக்காவும் ரஷியாவும் மாத்திரம் அந்த நிலையில் இருக்கின்றன. எனவே, இந்தியா தனித்திருப்பது முடியாத காரியம்—என்று நேரு விளக்கினார்—உடனே, நேரு ஜீக்கு ஜே—என்ற கோஷம், கரகோஷம்—எல்லாம—அங்கு—ஜெயபுரியில் கிளம்பின.

* * *

ஆகவே, அங்கு கிளம்பிய கரகோஷங்களைக்கொண்டு மாநாட்டினரின்மனநிலையைநிர்ணயிப்பதற்கில்லை. அவர்கள் எதிர்பார்த்தபடி எல்லாம் நடைபெற்று வருகிறது என்ற களிப்புடன் கூடவில்லை, என்பது, நன்றாகத் தெரிகிறது. இதனை மேலும் தெளிவுபடத் தெரிவிக்கிறார் சர்தார் படேல்!

உற்சாகம் எங்கே போயிற்று? ஜெயபுரியில் மட்டுமல்ல, எந்தப்புரியிலும், மக்களிடம் இல்லை, அந்த உற்சாகம்? அளவரிசிக் கொடுமையும், அகவிலைத் தொல்லையும், ஆடை போதாக் கஷ்டமும், வீடு கிடைக்கா விசாரமும், தொழில் வளரா நிலையும், தொழிலாளர் படும் அவமும், பழைய நிலையில்ச்துவும், மாறவில்லை. அரண்மனையில் ராஜாதான் உலாவுகிறார், எப்போதும்போல! முன்பு சன்

முகமோ, வீரவல்லவரோ, யாரோ ஒரு தர்பார் தளுக்கர் திவானாக இருப்பார். இப்போது படேல் பார்த்தனுப்பும் ஆசாமி திவானாகிறார்—என்ற வித்யாசம் தவிர, வேறு எதுவும் குறையவில்லை—மன்னர்களுக்கு மரியாதை காட்டுவதற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ள குண்டுகள் போடும் முறை உட்பட, எதுவும் மாறவில்லை. மாளிகைகளிலே எப்போதும் போல, சீமான்கள் சிங்காரமாகத்தான் உள்ளனர்! ஆலைகளிலே, இலாப வேட்டைக்காரர்கள் எப்போதும் போல்வே உள்ளனர்—சர்க்கார் கொடி பறக்கிறது ஆலைமீது—போலீஸ் பாரா இருக்கிறது தொழிலாளர் வட்டாரத்தில்! உத்தியோகஸ்தர்களின் 'சிகப்பு நாடா' மறையவில்லை. ஊர்ப் பெரியவர்களின் சிபார்சு முறைபோகவில்லை. முன்பு பொப்பிலிக்கு வேண்டியவர், டிக்சனுக்குத் தெரிந்தவர், என்று, விருது இருக்கும், இப்போது ஷெட்டிக்குத் தெரிந்தவர், பக்தவத்சலத்துக்குப் பந்து, M. L. A க்கு நண்பர், என்று இப்படி விருது, வேறு—இதுதான் வித்யாசமே தவிர, முறையும், மக்களுக்குள்ள குறையும் மாறவில்லை! இந்நிலையில் மக்கள் முகத்திலே மகிழ்ச்சி எப்படி இருக்க முடியும்?

பஞ்சவர்ணக் கிளிக்கு அருகே பூனையை இருக்கச் செய்துவிட்டு, காலை சென்று மாலை வீடு திரும்பி, எங்கே, கொஞ்சிடும் கிளி என்று கேட்கும் கதை போலிருக்கிறது சர்தாரின் கேள்வி. கேட்பானேன்! புடைத்திருக்கும் பூனையின் வயிற்றையும், கீழே சிதறியிருக்கும் கிளியின் சிறகுகளையும் பார்த்தால் போதுமே! பல நகரையும் நவநகரையும் பார்க்கும் கண்களைக் கொண்டுதானே, உழவனையும் பாட்டாளியையும் படேல் பார்க்கிறார். பார்த்தும், இந்தக் கேள்வியா கேட்பது?

✻

# சரித்திரத்தில் தமிழ்நாட்டிற்கு சரியான இடம் எங்கே?

[வித்வான். அ. கிருட்டிணமூர்த்தி]

—✻—

*சில நூற்றாண்டுகளாக இந்தியா என வழங்கப்படும் இந்நாட்டைப் பற்றி எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் பலப்பல, எனினும், முடிவாக அறுதியிட்டு எழுதப்பட்ட இந்திய வரலாறுகளிலும் அவற்றின் அமைப்பில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன என்றும், அவற்றைத் திருத்தியமைக்க வேண்டுமென்றும், இமயம்முதல் குமரிவரையுள்ள வரலாற்றுப் பேராசிரியர்கள் பலரும் நெடுநாளாகவே கருதிவருகின்றனர். இக்கருத்தில் கட்சிக்கொள்கையோ அல்லது மாறுபட்ட எண்ணமோ கிடையாது.*

*இந்திய வரலாறு எனக் கூறப்படும் நூலில், இராமாயணம் பாரதங்களும், புத்தரும் மகாவீரரும் இடம் பெறுகின்றனர். அதன் பின் அலெக்ஸாந்தர் படையெடுப்பும், மௌரியமன்னர்கள் ஆட்சியும், குப்தர்கள் ஆட்சியும் பிறவுமாக வரலாறுகள் நெடுகச் சென்று விடுகின்றன.*

*இவற்றிற்கிடையில் தமிழ்நாட்டில் செங்கோலோச்சிய முடியுடைவேந்தர் மூவர் செய்திகளும், வடநாட்டுச் செய்திகளை நோக்க மிகமிகக் குறைவாகக் கூறப்படுகின்றன. அப்பகுதியைக் கடந்து சென்றால் 8, 9-ம் நூற்றாண்டிற்குப் பிறகு இடைக்காலத்துச் சோழப் பேரரசர்களான இராஜராசன், இராஜேந்திரன், குலோத்துங்கன் என்ற இவர்கள் பற்றிய செய்திகளும் அங்ஙனமே கூறப்படுகின்றன. பண்டை வரலாற்றை வரைவதற்கு வடநாட்டிற்கிடைக்கும் கருவிப்பொருள்களைவிடத்தென்னாட்டில் அவ்வளவாக, அப்பொருள்கள் குறைந்துவிடவில்லை. அங்ஙனமிருந்தும் தமிழக வரலாறு, இந்திய வரலாற்றில், நல்ல இடம் பெறாமலே இருந்து வருகின்றது. அதாவது, வடநாட்டு வரலாறு விரித்துக் கூறப்படுமளவு இந்நாட்டு வரலாறுவிளக்கப்படவில்லை என்பது.*

*இங்ஙனம் குறைவுபட்டமைக்குக் காரணம் மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று; இந்திய வரலாறு எழுதப்பட்ட காலத்தில் தென்னாட்டைப்பற்றிய கருவிப் பொருள்கள் மிகுந்து கிடைக்கவில்லை என்பது. இரண்டு: கருவிப்பொருள்கள் கிடைத்த பின்னும் அவற்றைப் போற்றி, அடுத்து எழுதப்படும் நூல்களில் விரித்துக்கூறாமல் பழைய அடிச்சுவட்டையே பின்பற்றிப் புறக்கணித்துப்போவது. மூன்று; வேண்டுமென்றே இந்நாட்டு வரலாற்றை மறைத்தும் சுருக்கியும் வரைவது. இவற்றுள் முதலிற்கூறிய காரணம் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் செல்லுபடியாக இருந்ததாயினும், இன்றைய நிலையில் அதனை முழுவதும் வைத்து ஒப்புக்கொள்ள முடியாது. வடநாட்டு வரலாற்றிற்குக் காட்டப்படும் பேருதவியை நோக்குப்போது, அக்காரணம் அடியோடு மறுக்கக்கூடியது எனவும் கூறலாம். ஏனெனில், வடநாட்டு வரலாறு எந்தெந்தவகையில் விரித்துக் கூறப்படுகிறதோ, அவ்வகையிலெல்லாம்தமிழ்நாட்டு வரலாற்றையும் ஏறக்தாழ விரித்துக் கூறமுடியும் என்பதே.*

*இரண்டாவது காரணம்: இந்திய வரலாறு முழுமையும் பெரும்பாலும் வடநாட்டவராலும் ஆங்கிலேயராலும் எழுதப்பட்டுள்ளன. ஆதலின் தென்கோடியிலுள்ள தமிழ்நாட்டைப்பற்றியோ, அதில் கிடைத்துள்ள கருவிகளைக்கொண்டு ஆராய்ந்து அதன் பிரிவுகளைவிளக்குவது பற்றியோ அவர்கள் கவலை கொள்வதில்லை. அவருள்ளும் ஆங்கிலேயர்கள் தமிழகத்தைப்பற்றிக்கூறுவதைவிட வடநாட்டவர் குறைவாகவே எழுதுகின்றனர்.*

*இவ்விடத்தில், ஏன் தமிழ்நாட்டார் அதனை எழுதக்கூடாது எனக் கேள்விஎழும்; அதற்குத்தான் மூன்றாவது காரணம்குறிக்கப்பட்டது.*

*இந்நாட்டில் இந்திய வரலாற்றை எழுதப் புகுந்தவர் மிகச் சிலர். அவருள்ளும், தமிழர் நன்மையைக் கருதாத வஞ்ச நெஞ்சத்து மக்கள் மிகப் பலர். மிஞ்சி நின்றவர் அவரையொட்டிச் செல்வதோடு தமிழகத்தைப் பற்றிய சிறுகருத்தும் இல்லாதவர். இவரை எல்லாம் கடந்து ஒரு சில தமிழர், எழுதத் தொடங்கினும் அதற்கு நல்லுதவியும், நன்மதிப்பும் கிடைப்பதில்லை. மாறாக அவர்கள் வாழ்க்கையே அழிந்துவிடும் வகையிலும் கெடுதல்கள் செய்தனர் செய்கின்றனர்: செய்வதைத் தடுக்கவே கிளர்ச்சி நடக்கின்றது.*

ஆகவே, தமிழகத்தின் வரலாறு நன்கு விளக்கப்படவில்லை என்றால், அதற்குக் கடைசியில் கூறிய காரணமே மிக வலிமையுடையதாகும். சிறிது விளக்கிக் கூறினால், தாய் நாட்டில் விளக்கப்படாத வரலாறு பிறநாட்டவரால் விளக்கப்படும் என எதிர்பார்க்க முடியாது எனலாம்.

தென்னாட்டுச் சிறப்பை விளக்குவதற்கு அதன் பல பகுதிகளை இன்னும் தோண்டிப் பார்க்கவேண்டும். தோண்டுவதற்கென்று வடநாட்டில் செய்யப்பட்ட அளவு இந்நாட்டில் செலவு செய்யப்படவில்லை. ஊக்கமும் காட்டவில்லை. இதற்கு அரசியலாரும், தமிழர் நன்மை கருதாத வடவாரியரும் காரணராவர் என்க.

இனி, இவ்வாறு முடன்று ஆராய்ந்து முடிபுகள் கண்டாலுங்கூட, பின்னும் இடர்ப்பாடுகள் இல்லாமல் இல்லை. வடநாட்டு வரலாறு போகின்ற போக்கில், தென்னாட்டுச் செய்திகள் அதனுடன் தொடர்ந்து செல்லுவதில்லை. எடுத்துக்காட்டாக வடநாட்டு வரலாறு, ஆரியர்கள் வருகை முதல் கில்ஜி வமிசத்து அலாவுதீன் காலம்வரை, அதாவது பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கம் வரை நீண்டு சென்றுகொண்டிருக்க, தென்னாட்டு வரலாறு அவர்களுக்கு முற்றும் வேறுபட்ட தனி மனிதர்களின் கீழ் வேறொரு வகையாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே இரண்டு நாடுகளின் வரலாற்றையும் ஒன்றாகக் கூறத்தொடங்கினால் ஒன்றைக்கூறும்போது மற்றொன்றை நிறுத்தி வைக்கவேண்டும், இங்ஙனம் இருவேறு வரலாற்றையும் பிணைத்து எழுதுவது ஒருபோலி வேலையாகவும் பயனில் செயலாகவும் முடியும். எனவேதான் தமிழ் நாட்டின் வரலாறு தனிப்பட்டதென் பதோடு அதனை விரித்து விளக்கவும் வேண்டும் என்கிறோம்.

இராமாயண பாரதங்கள், வரலாற்றில் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளதையும், அவை முற்றும் வரலாற்றோடு வைத்தெழுதப்பயன்படுவதில்லை என்பதையும் அனைவரும் அறிவர். இராமாயணம், ஆரிய—திராவிடப் போராட்டத்தைவிளக்குவதென்பது முடிந்த முடிபு. பாரதம், வடநாட்டு வரலாற்றின் தொடக்க காலத்தில் அங்கிருந்த சில மன்னர்களின் நிலைமையும், அக்காலத்து நாகரிகத்தையும் விளக்கப் பயன்படுமென்பதை யாரும் மறுப்பதற்கில்லை இக்காரணங்களால் இவ்விரண்டு நூல்களும் 'இந்திய வரலாற்றில்' வைத்துவிளக்கப்படுவதும் போற்றப்படுவதும் காணும்போது அவற்றைவிட வரலாற்றுத் துறையில் பெரிதும் பயன் தரக்கூடிய, சான்றுகள் மிக்க சிலப்பதிகாரம், மணிமேகலைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தாழ்ந்த இடம், நமது நினைவுக்கு வருகின்றது.

இந்தியா எனும் பெருநிலத்தில் வடநாடு, தமிழகம் இரண்டையும் சேர்த்துவைத்து, வடநாட்டுக்கு இராமாயண, பாரதத்தைக் காட்டி வரலாறு வரைகிறார்கள். தமிழ்நாட்டுக்குச் சிலப்பதிகாரம், மணிமேகலைகளைக் காட்டுவதேயில்லை. காட்டுமிராண்டித்தனம் மலிந்து கிடக்கும் இராமாயண பாரதங்கள், அவை நிகழ்ந்த காலத்து நாகரிக வரலாற்றைக் காட்டுமானால், எமது சிலப்பதிகார மணிமேகலைகள், அக்காலத்துத்தமிழ் நாட்டின், உயரிய நாகரிகத்தைப் பளிங்குபோல எடுத்துக் காட்டும். சிலப்பதிகார மணிமேகலைகள் வரலாற்றுக்குப் பயன்படா எனக்கூறுவார்களாயின், இராமாயண பாரதங்கள் வரலாறு இருக்கும் பகுதியை எட்டிப்பார்க்கவும் தகுதியுடையன அல்ல.

வடநாட்டு இராமன் தென்னாட்டுப்பெருவேந்தனோடு போர் செய்தானென்றால்-அதனைக் காட்டுமிராண்டித்தனமான முறையில் இராமாயணம் விளக்கிக் கூறுகின்றதென்றால்-தென்னாட்டுத் தமிழ்வேந்தன் ஆரிய மன்னனின் முடித்தலையெரியவைத்த செய்தியையும், அக்காலத்து அகன்று பரந்த அருமைத் தமிழ் நாகரிகத்தையும் நாகரிகமான உயரிய மொழிகளால் வைத்துக்கூறுகின்றது எமது சிலப்பதிகாரம். இதற்குச் சான்றுகள் வேண்டுமானால், பலப்பல கூறக்கூடும். இயல்பகுதியாலும், நாடகப் பகுதியாலும், மொழிப்பகுதியாலும் சமயப்பகுதியாலும், நாகரிகப்பகுதியாலும், வரலாற்றுப் பகுதியாலும், வேறு எப்பகுதியாலும் ஒரு சிலப்பதிகாரத்தை ஒரு இராமாயணம் வெல்லுங்கொல்? ஒவ்வாது! ஒவ்வாது!! அத்தகைய சிறந்த நூலுக்கும், அதனையடுத்த மணிமேகலைக்கும் இடங்கொடாதபொழுது, இராமாயண பாரதங்கட்கு எவ்வாறு வரலாற்றில் இடம் கிடைத்தது? இவற்றை வரலாற்றுத் துறைப் பேரறிஞர்கள்கருதிப்பார்க்கவேண்டுகிறேன்.

●

2-ம் பக்கத் தொடர்ச்சி

1947 நவம்பரில் ஏற்பட்ட பிரிட்டிஷ் கூர்க்கா ஒப்பந்தத்தின் மூலம், கூர்க்கா படைகளைப் பிரிட்டன் உபயோகிப்பதற்கு இந்திய சர்க்கார் இணங்கியதால் பிரிட்டிஷார் ஏராளமான படைகளை இந்தியாவிலிருந்து கொண்டு செல்கின்றனர், மலாய் மக்களை நசுக்க. ❀


சி. என். ஏ. எழுதிய

# "வாழ்க்கைப் புயல்"

விலை: 0—12—0

டிம்மி அளவில் 56-பக்கங்கள் கொண்டது

கிடைக்கும் இடம்:—

பரிமளம் பதிப்பகம்
54. வரகுவாசல் தெரு
காஞ்சிபுரம்.

குறிப்பு:- ஒரு புத்தகம் வேண்டுவோர் பதின்மூன்றணா முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். விற்பனையாளர்கள் 25% கழிவு நீக்கித் தபாற் செலவுத் தொகையும் சேர்த்து முன்பணம் அனுப்பினால் தேவையான புத்தகங்கள் அனுப்பப்படும். "சிந்தனை விருந்து" என்ற நூல் கைவசம் கிடையாது.

# காங்கிரஸ் தமிழனுக்கும், சுயமரியாதை தமிழனுக்கும் வாக்குவாதம்

(சித்திரபுத்திரன்)

*காங்கிரஸ் தமிழன்* :— நண்பா இந்தி விஷயமாக நீங்கள் அநாவசியமாய்ப்பிரவேசித்துத் தமிழ் நாட்டில் வகுப்புணர்ச்சியை கிளப்பிவிட்டு, வீண் கலவரமும் குழப்பமும் செய்து வருகிறீர்களே! இது நியாயமாகுமா?

*சுயமரியாதைத்தமிழன்*:-தோழனே! நீ ஒரு தமிழன் என்கிற உணர்ச்சி கூடச்சிறிதும் இல்லாமல் இந்தி விஷயமாகப்பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும் செய்துவரும் விஷமப்பிரசாரத்தை நம்பிக்கிளிப்பிள்ளை போல் பேசுகிறாயே, இதுதான் தமிழ் மகனுக்கு அழகா?

*கா. த*:- நண்பனே கோபிக்க வேண்டாம். பொறுமையாகப் பேசு. இந்தியினால் தமிழனுக்கு என்ன குடி முழுகிப் போகும்? ஒரு பாஷையைக் கற்றுக்கொள்ளச் சொன்னால் இதில் பார்ப்பனன் தமிழன் என்கிற உணர்ச்சி ஏன் ஏற்படவேண்டும்?

*சு. த*:- தோழா நான் ஒன்றும் பொறுமை இழந்துவிடவில்லை. நான் சொல்வதை நீ மாத்திரம் பொறுமையாகக் கேட்டுப் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து பார்த்தால் போதும்.

*கா த*:- மிகமிகப் பெறுமையாகவே கேட்கிறேன். நீ ஆத்திரப்படாமல் சொன்னால் போதும்.

*சு த*:- தமிழ் நாட்டில் ஆரியர் எப்படியோ ஆதிக்கம் பெற்றுவிட்டதாலேயேதமிழர்கள் ஆரியர்களுடைய பாஷையைக் கட்டாயம் படிக்க வேண்டும்என்பதும், ஆரியபாஷையே தமிழ் நாட்டுக்கும் அரசியல் பொதுப் பாஷையாக இருக்கவேண்டும் என்று சொல்வதும், அதை எல்லாமக்களும் ஒப்புக்கொள்ளவேண்டும் என்பதும் ஆகும்.

*கா த*:-இந்தச் சமாதானம் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனபோதிலும் பரவாயில்லை. இந்தியினால் தமிழுக்கு ஆபத்து என்று சொல்லுகிறாயே, என்ன ஆபத்து? எப்படி வந்துவிடும் என்பது எனக்கு விளங்கவில்லை.

*சு. த*:- சரி, அப்படியானால் நான் சிலவற்றைப்பற்றி மாத்திரம் உதாரணம் காட்டுகிறேன். அவற்றிலிருந்து பார்ப்பனர்கள் நம் தமிழ்நாட்டில் சமுதாயத்துறையிலும் அரசியலிலும் ஆதிக்கம் பெற்ற பிறகு தமிழுக்கு என்ன யோக்கியதை கொடுத்திருக்கிறார்கள்? தமிழை எக்கதி ஆக்கினார்கள்? என்பதை சற்றுக்கவனித்துப்பார்.

## கல்வித்துறை

கல்வித்துறையில் கணக்கை எடுத்துக்கொள். அதற்குப்பார்ப்பனர் இட்டு இருக்கும் பெயர்களைப்பார்:-

கணிதம், பீஜகணிதம், பின்னம், தசுபின்னம், தசாபின்னம், க்ஷேத்திரகணிதம், தசாம்சம் இவை போன்ற ஆரியபாஷைப்பெயர்களைத்தான் அமுலுக்கு கொண்டுவந்துவிட்டார்களே ஒழிய, இவற்றிற்கு ஏதாவது தமிழ்ப்பெயர் உண்டா? உனக்காவது ஏதாவது தெரியுமா? மற்றும் பூகோள நிலவிளக்கப் பிரிவை எடுத்துக்கொள்.

## பூகோளம்

பூகோளம், குணகோளம், குடகோளம், உத்தரதுருவம், தக்ஷணதுருவம், பீடபூமி, கண்டம், மாகாணம், ராஜதானி, தீபகல்பம், தீவு, ஜலசந்தி அக்ஷரரேகை, நிரக்ஷரரேகை, பூமத்தியரேகை, பிரதேசம், கிராமம், நகரம், தேசம், ராஜ்யம், என்பனபோன்ற ஆரிய பாஷைப் பெயர்களையே புகுத்தி நிலை நிறுத்தி விட்டார்கள்.

அரசியலை எடுத்துக்கொண்டு பார்.

## அரசியல்

தேசியம், சுயராஜ்யம், சுதந்திரம், சமதர்மம், அபேதவாதம், சமஷ்டி, பூரண சுயேச்சை, சத்யாக்ரகம், அஹிம்சை, மகாஜனங்கள், அக்கிராசனாபதி, சமூகம், சமுதாயம், சமாஜம், சம்மேளனம், பிரஜா மண்டலம், வியாய மண்டலம், ராஷ்டிரபதி, பாரதமாதா, அவலம்பனம், வருஷோற்சவம், உபந்யாசம், பிரசங்கம், பரீக்ஷை, மசோதா, அங்கத்தினர், காரியக்கமிட்டி, மகா சபை, பிரதம சபை, பிரேரபணை, ஆமோதிப்பு, பிரதிநிதி, நிர்வாக சபை ஆகியவையும் மற்றும் இவை போன்ற சொற்களும் எவ்வளவு அனுபவத்தில் கொண்டுவரப்பட்டு விட்டன என்பதையும், இவைகளுக்கு எல்லாம் தமிழில் வார்த்தை உனக்குத் தெரியுமா என்பதையும் யோசித்துப்பார்.

மற்றும் வான சாஸ்த்திரம் என்பதைப் பற்றியும் சொல்கிறேன் கேள்.

## வானசாஸ்திரம்

வாயு, உஷ்ணம், சீதோஷ்ணநிலை, சீதமண்டலம், சூரியன், சந்திரன், நட்சத்திரம், கிரகணம், லக்கினம், திதி, அமாவாசை, பௌர்ணமி, வருஷம் முதலியவற்றைப் பார்.

மற்றும் சமயத்துறையில் சொல்ல வேண்டியதில்லை.

## சமயம்

மதம் வேதம், புராணம் இதிகாசம், சாஸ்திரம், ஸ்மிருதி, சுருதி உபநிஷத், பிரமாணம், பாஷ்யத், ஆகமம், சித்தாந்தம், வேதாந்தம், ஆச்சிரமம், ஆத்மா, மகாத்மா போன்ற வார்த்தைகள் எவ்வளவு பிரபலத்தில் கொண்டுவரப்பட்டு இருக்கின்றன என்பதைப் பார்.

இனிப், போதாக்குறைக்கு இந்தி என்றும் இந்துஸ்தானி என்றும் பல பெயர்களைச் சொல்லி அதே ஆரிய பாஷையைக் கட்டாயமாய்ப் புகுத்தி அதையே ராஜ பாஷையாகவும் ஆக்கிவிட்டால் தமிழ் வாழுமா என்பதை இப்போது நடு நிலையில் இருந்து யோசித்துப்பார்.

இம்மாதிரியாகவே எல்லாத்துறைகளிலும் தமிழ் ஒழிந்து ஆரியம் நிமிர்ந்து பழக்க வழக்கங்களில் அமுலில் வந்து தாண்டவமாடுகின்றதை மறைக்க யாராலாவது முடியுமா?

★

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.